சகிதம் — கூடப்பட்டது, அஞ்சுவது. [1: ஸஹித—ஸ. அக. 2: வகித—ஸ. அக.]

சகை—பூமி, கற்ருழை, நன்ருறி, குறுட்டை [1, 2: ஸஹொ... ஷியாநு ...; ... கூஊாஸீ வுயிவீஷ வமெ. ஹ, 10, 11. 3, 4:]

சிகை—கிரணம்[1], சுவாலை[2], மரக்கொம்பு[3], விழுது[4], கவளம்[5], செங்காந்தள்[6], குடுமி[7], மயிற்சூட்டு[8], முதன்மை[9], [1-4, 6-9: ஶிவா... வமுஷாயாம் கெகிவமுஷாவுயாமயொ:, ஜாலாயாம் லாஜுலிகாயாம் ஶிஹாஶாவாவுணிஷுவி—சு. ஸ. ii, 27. 5: அக.]

32. சகச முடன்பிறந் ததுதன் னியல்பு
விகசித மலர்ச்சி நடுவா மென்னகை
விகநம் பஞ்சை யெஃகும் விற்கோலை
தகர மயிர்ச்சாந் தோர்மர மீயம்.

சகசம்—உடன்பிறந்தது, தன்னியல்பு. [1, 2: ஸஹஜ: ஸஹஸஜூ-வெ; நிஸமெ வ—சு. ஸ. iii, 139, 140.]

விகசிதம்—அலர்ச்சி, நடுவாம் மென்னகை. [1: விகஸிதழ—ஸ. அக. 2: ஊயமூ: ஸமூஹஸிதம்—சு. கொ. I, vii, 35.]

விகநம்—பஞ்சைக் கொட்டும் வில், கொலை. [1, 2: விஹநநம் தசு விஜுநெ; வயெ—சு. ஸ. iv, 192, 193.]

தகரம் — மயிர்ச்சாந்து, ஓர் மரம், ஈயம். [1: பிங். vi, 212, 2: நந்த்யாவர்த்த தகரமா:—வை. 61, 388. 3: அக. நி. 118.]

33. அகர முதலெழுத் தந்தணர் சிரேணியூர்
அகரு காரகி லிருவீ டகிலுமாம்
சிகழிகை பூந்தார் மலர்முடி வாசிகை
சுகிர்தம் புண்ணியஞ் சுபநற் செய்கையே.

அகரம் — முதலெழுத்து, பிராமணர்தெரு, ஊர். [1, 2: அக. 3: திவா. v, 92.]

அகரு—காரகில், இருவீடு என்னும் மரம், அகில். [1-3: காலாகரு-ஸமரௌ வத்வௌ; ஸிம்ஸபாயாம்—சு. ஸ. iii, 513, 514.]

சிகழிகை—பூமாலை, மலர்முடி, வாசிகை. [1-3: பிங். (x, 484) யிற் சிகழிகை 'மயிர்முடி வாசிகை கோவை சிகழிகை' யெனக் கூறப்பட்டது. இதற்குப் பொருள் மயிர்முடி, தொடுத்தமாலை, கோத்தமாலை யென்றெழுதப்பட்டுளது. பிங். (vi, 229) யில் கோத்தமாலை யென்ற தலைப்பின்கீழ் 'சிகழிகை படலை வாசிகை தொடையல்' என்று வந்தது. திவா. (iv, 268) வாசிகையை 'மாலை சிகழிகை வாசிகை தொடைய லாகுமென்ப வறிந்திசினோரே' என்றது. சூடா. (xi, க, 2) 'சிகழிகை மயிர்மு டிப்பேர் சிறந்த வா சிகைதே மாலை' யென்றது; இதற்குப் பொருள் எழுதியோர் மயிர்முடி, சிகைமாலை, பூமாலை யென்றெழுதினர். வாசிகை யென்பதென்ன? மூலத்தில் மயிர்முடி யென்றிருக்கற்பாலது மலர்முடியெனப் பிரதிசெய்தோரால் பிழைபட எழுதப்பட்டது போலும். இன்னும், பிங். (ix, 377) யில் சிகழிகை சிகைமாலையின் பெயராகவும் கூறப்பட்டது.]

சுகிர்தம் — புண்ணியம், சுபம், நற்செய்கை. [1-3: ஸுக்ருதம் தா ஸுபே புண்யே ஸுவிஹிதே—சு. ஸ. iii, 304.]

34. விகிர்தியொ ராண்டு பேதம் விகுதி
நெகிழ்தல் குழைதல் மலர்தல் தளருதல்
மகிழ்நன் மகிழ்வோன் மருதத் தலைவன்
நகுத லொளிர்த ருகழ்த னகைத்தல்.

விகிர்தி—ஓர் ஆண்டு, மாறுபாடு, விகுதி. [1: விக்ருத:—ஸ. அக. 2: விக்ருதி—ஸ. அக. 3: விக்ருதி—ஸ. வியாகரண வழக்கு.]

நெகிழ்தல்—குழைதல், மலர்தல், தளர்தல். [1, 2: அ. வி. நி. 49. 3: வழக்கு.]

மகிழ்நன்—மகிழ்வோன், மருதநிலத்தலைவன். [1: அக. 2: திவா. ii, 140.]

நகுதல்—ஒளிர்தல், இகழ்தல், நகைத்தல். [1: திவா, viii, 57. 2: பிங். vii, 120. 3: அக.]

35. **ககுபந் திசைதந் திரித்தடை மருது**
சுகுமா ரம்வெண் கரும்பு மிருது
தகையே பெருமை தன்மை யிளைப்பு
புகையோ சனைதீப் புறப்படு மாவி.

ககுபம்—திசை, தந்திரித்தடை, மருதமரம். [1: திஶஸ்து ககுப: —அ. கோ. I, iii, 1. 2, 3 : ககுபோ வீணாப்ரஸேவே...அர்ஜுநத்ருமே. ஹை—அ. ஸ. iii, 446.]

சுகுமாரம்-வெண்கரும்பு, மிருது. [1, 2: ஸுகுமாரஸ்து கோமலே, வர்ணேக்ஷௌ—அ. ஸ. iv, 285.]

தகை—பெருமை, தன்மை, இளைப்பு. [1: திவா. viii, 20. 2: திவா. viii, 257. 3: அ. வி. நி. 19.]

புகை-யோசனைதூரம், தீயிற் புறப்படும் ஆவி. [1: திவா. v, 240. 2: சூடா. xi, க, 7.]

36. **யுகந்தரம் பழுபா கலும்பார் மரமுமாம்**
சுகந்திநன் மணமுள தேலா வாலுகம்
திகம்பரன் சினவரன் சிவனிரு வாணிபேர்
முகுந்தமோர் நிதிகுந் துருவெள் ளிரதமே.

யுகந்தரம்—பழுபாகல், நுகங்கோக்குந் தடி [1: 2: கூபரோ நா யுகந்தர:—வை. 115, 264.]

சுகந்தி — நன்மண முள்ளது, ஏலாவாலுகம். [1: இஷ்டகந்த: ஸுகந்தி:— அ. கோ. I, v, 11. 2: ஏலாவாலுகம் ... ஸுகந்தி — அ. கோ. II, iv, 121.]

திகம்பரன் — சினவரன், சிவன், நிர்வாணி. [1-3: திகம்பரஸ்து ஶங்கரே;...க்ஷபணகே ஸர்வார்தஸஹிதே…வி வ—அ. ஸ. iv, 257, 258.]

முகுந்தம்—ஓர் நிதி, குந்துருக்கம், இரசம். [1, 2: முகுந்தோ நிதிபிதே ... குந்துரௌ — மே. த, 38. 3: முகுந்த: ... பாரதே— வி. ரு. த, 32.]

37. புகார்கழி முகங்கா விரிப்பூம் பட்டினம்
குகூல முமித்தீத் தறிநிரப் பியகுழி
துகூல மென்பவெண் பட்டுமென் றூசுமாம்
அகோரஞ் சிவன்முகத் தொன்றஞ் சாமையே.

புகார்—கழிமுகம், காவிரிப்பூம் பட்டினம். [1: திவா. v, 51. 2: பிங். iv, 24.]

குகூலம்—உமித்தீ, தறி நிரப்பிய குழி. [1, 2: குகூலம் துஷாநலே; ஶங்குஸம்யுக்தகர்தே ச—ஶ. ஸ. iii, 633, 634.]

துகூலம்—வெண்பட்டு, மென்றூசு. [1, 2: துகூலம் ஸூக்ஷ்மவாஸஸி, க்ஷௌமவஸ்த்ரே—ஶ. ஸ. iii, 649.]

அகோரம் — சிவன் ஐம்முகத்தொன்று, அஞ்சாமை. [1: பிங். ii. 7. 2: அகோர—ஸ. அக. 'பயங்கரமின்மை'. கோரம் அகோரம் இரண்டும் அக. யில் பயங்கர முடைமை யென்னும் ஒரு பொருளனவாகக் காட்டப்பட்டுள்ளன. அகோரத்திற்கு அப் பொருள் மங்கலவழக்கு. அகோரம் பயங்கரமின்மை யென்னும் பொருளதாகவுங் காட்டப்படுகின்றது. இங்கு அஞ்சாமை மங்கலவழக்குப் பொருளைத் தழுவியதாகத் தோன்றுகின்றது; தான் பயங்கர ஸ்வரூபியாயின் அஞ்சாமை யுடையனுவனன்றோ. 'அகோர வீரபத்திரன்' என்னும் வழக்கும் நோக்குக.]

38. பக்கண மூறு காய்தின் பனவேடச் சேரி யென்ப
முக்கணன் கணேசன் வீர பத்திரன் மகேசன் முப்பேர்
உக்கம்பே ரால வட்ட நுசுப்பிட பமுமு ரைப்ப
சொக்கந்தூய் தெழில்கீ தப்பேர் சுக்கிரன் கனலோ ஞேர்கோள்.

பக்கணம்—ஊறுகாய், தின்பன, வேடச்சேரி. [1: 2: பக்ஷணம்—ஸ. அக. 3: வக்ஷண:—ஸ. அக.]

முக்கணன்—கணேசன், வீரபத்திரன், சிவன். [1: பிங். ii, 1. 2: பிங். ii, 22. 3: பிங். ii, 2.]

உக்கம்—பேராலவட்டம், இடை, இடபம். [1: பிங். vi, 601. 2: சூடா. ii, 88. 3: உக்ஷா ... வ்ருஷப:—ஶ. கொ. II, ix, 59.]

சொக்கம்—தூய்து, அழகு, கீதம், [1, 2: அக. 3: சிலப்பதிகாரம், பதிகம், 73 உரையில் சொக்கம் நிருத்தவகை யெனக் கூறப்பட்டது.]

சுக்கிரன்—அக்கினி, ஓர் கோள். [1, 2: ஶுக்ர: காவ்யே ந௮ெ—வி. வ்ரு. ந, 51.]

39. பொக்கம்பொய் பொலிவு மிக்காம் பொக்கென்ப பதர்குற் றப்பேர்
செக்கர்செவ் வான்சி வப்பு மக்கண்மா நுடர்சி றூராம்
எக்கலெக் குதலே றற்பேர் எஃகமா யுதம்வேல் சக்ரம்
நிக்கிர கம்மொ டுக்க மெல்லேபக் தகமு கேரும்.

பொக்கம்—பொய், பொலிவு, மிகுதி. [1: பிங். vii, 131. 2: பிங். vii, 475. 3: அக. நி. 183.]

பொக்கு—பதர், குற்றம். [1: வழக்கு. 2: அக.; திவா. viii, 176—பிங். vii, 103; சூடா. viii, 58: ‘போக்கு’.]

செக்கர்—செவ்வானம், சிவப்பு. [1: அக. 2: திவா. viii, 48.]

மக்கள்—மானுடர், சிறுர். [1: திவா. ii, 161. 2: அக.]

எக்கல்—வயிற்றை எக்குதல், ஏறுதல். [1: அக. 2: திவா. ix, 24.]

எஃகம்—ஆயுதம், வேல், சக்கிரம். [1: சூடா. vii, 16. 2: திவா. vii, 13. 3: திவா. vii, 4.]

நிக்கிரகம்—ஒடுக்குகை, எல்லே, பந்தகம். [1: நிக்ரஹ:—ஸ. அக. 2, 3: நிக்ரஹ:, பந்தனே ... ஸீம்நி—ஶ. ஸ. iii, 760.]

40. சக்கிரங் கோண்வ ரைந்த மந்திரத் தகடி ராசிச்
சக்கிரந் தேசந் தேர்க்கால் சலதிநீர்ச் சுழியோ டாணைச்
சக்கிரந் திரிகை செக்குச் சமூகம்வெட் பாலே சேனை
சக்கிர வாக மோரா யுதம்வட்ட மெனமூ வைம்பேர்.

சக்கிரம்—கோணம் வரைந்த மந்திரத்தகடு[1], இராசிச் சக்கிரம்[2], தேசம்[3], தேர்க்கால்[4], கடல்[5], நீர்ச்சுழி[6], ஆஞ்ஞாசக்கிரம்[7], திரிகை[8], செக்கு[9], சமூகம்[10], வெட்பாலை[11], சேனை[12], சக்கிரவாகப்புள்[13], சக்கிராயுதம்[14], வட்டம்[15]. [1, 2, 7, 9, 15: சக்ரம்—ஸ. அக. 3, 4, 6, 8, 10, 12, 13: சக்ரம் ... ரதாங்கே, கூலாலோபகரணே ராஷ்ட்ரே ஸைந்யதைலயந்த்ரயோ:; ஜலாவர்த்தே ... சக்ர: கோகே—ஶ. ஸ. ii, 405, 406. 11: குடஜ: ஶக்ர:—ஶ. கோ. II, iv, 66. 14: சக்ரம் ... ஶஸ்த்ரபேதயோ:—வை. 224, 13. 5: பிங். iv, 137.]

41. வக்கிரங் கொடுமை வட்டந் திருமுதல் வளைவு மாகும்
வக்கிரன் குரூரன் செவ்வாய் சுக்கொரு மருந்து சோகம்
சுக்கிலம் விளர்ப்போர் தாது சுக்கையே மலர்த்தார் விண்மீன்
கைக்கிளை யிசையி னொன்று மொருதலைக் காம மும்பேர்.

வக்கிரம் — கொடுமை, வட்டம், திரும்புதல், வளைவு. [1, 3, 4: வக்ரம் குடிலேபி வக்ர: க்ரூர... — க. வ. ii, 441. 2: சூடா. xi, க, 8.]

வக்கிரன் — குரூரன், செவ்வாய். [1, 2: வக்ர: ... க்ரூரலௌமயோ: — க. வ. ii, 441.]

சுக்கு — ஒரு மருந்து, சோகம். [1: ஶுக்ஷ், ஶுக்ஷார்த்ர — வ. அக. 2:]

சுக்கிலம் — விளர்ப்பு, ஏழுதாதுள் ஒன்று. [1: ஶுக்ல: — க. கோ. I, v, 12. 2: ஶுக்லம் வ்யாநயாத்ர: — வை. 182, 222. வ. அக.]

சுக்கை — பூமாலை, நட்சத்திரம். [1: திவா. iv, 254. 2: பிங். ii, 177.]

கைக்கிளை — ஏழிசையி னொன்று, ஒருதலைக்காமம். [1: திவா. x, 153. 2: திவா. viii, 95.]

42. தெக்க ணஞ்செய் யுளின்றொடர்ச்சி தெற்குச் சரள மரம்வலப்பால்
அக்க மாலை யருந்த தியோ டுருத்தி ராக்க மணிமாலை
கக்கம் பாவம் கிளைக்கொடிபுல் லுலர்கான் றாறு கைம்மூலம்
சிக்கல் மெலித லகப்படுதல் செக்கோ ரியந்தி ரஞ்சதையம்.

தெக்கணம் — செய்யுளின் தொடர்ச்சி, தெற்கு, சாளமரம், வலப்பக்கம். [1-4: தக்ஷிணஸ்து வரவுநாநுவர்த்தி, தக்ஷிணவலவெவ்யலாரமெ — க. வ. iii, 196. இங்குக் காணும் பொருள்களுள் வரவுநாநுவர்த்தி என்பது செய்யுளின் தொடர்ச்சியோடு ஒருவாறு பொருந்துவது. ஶா. கோ. (130) மும் வரவுநாநுவர்த்தீ யென்னும் பொருளையுந் தருகிறது. ஸம்ஸ்கிருதத்தில் இத்தொடர்க்கு 'பிறர் மனத்துக்கிசைய நடப்பவன்' என்னும் பொருளே சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. ஜை. யில் தக்ஷிணோ தக்ஷிணாஹ்ருததவரவுநுவர்த்திஷு என்று வந்தது. வர இன்றித் தொடர் வருமிடத்தும் தன்னிஷ்டப்படி நடப்பவின், பிறர் அபிப்பிராயம்போல் நடப்பவன் என்றிருவிதமாகவே பொருள் சொல்லுகின்றனர்.]

அக்கமாலை—அருந்ததி, உருத்திராட்சமணிமாலை. [1, 2: அக்ஷமாலா த்வக்ஷமாலாயாம் வஸிஷ்டஸ்ய ச யோஷிதி—அ. வ. iv, 286.]

கக்கம்—பாபம், கிளைக்கொடி, புல், உலர்காடு, புதல், கைம்மூலம். [1, 3-6 : கக்ஷோ வீருதி தோஷே ... ஸுஷ்கவநே த்ருணே வாஹௌ—அ. வ. ii, 546. 2: கக்ஷ:—ஸ. அக.]

சிக்கல்—மெலிதல், அகப்படுதல். [1: சூடா. ix, 61. 2: அ. வி. நி. 24.]

செக்கு—ஓர் இயந்திரம், சதய நட்சத்திரம். [1: அக. 2: திவா. i, 100.]

43\. தக்கன் றெரிந்தோ னோர்பிரசா பதியு தாச னன்சமர்த்தன்
உக்கி ரன்வீ ரேசனரன் சதுர்த்தை யான்மன் னருக்குதித்தோன்
இக்கு கந்தை நீர்முள் ளி நெருஞ்சி நாணல் வெள்ளீறில்
இக்கு வாகு குந்துருக்கம் பிசினே ரிராசன் பேய்ச்சுரையே.

தக்கன்—தெரிந்தோன், ஓர் பிரசாபதி, அக்கினி, சமர்த்தன். [1, 3: ஸ. அக. 2, 4: தக்ஷ: ப்ரஜாபதௌ...படௌ—அ. வ. ii, 550.]

உக்கிரன்—வீரபத்திரன், சிவன், சூத்திர ஸ்திரீயிடத்து க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன். [1: பிங். ii, 22. 2, 3: உக்ர: க்ஷத்ரியத: ஸூத்ரா-வஸ்தௌ...ருத்ரயோ:—அ. வ. ii, 386.]

இக்குகந்தை—நீர்முள்ளி, நெருஞ்சி, நாணல், வெள்ளீறில். [1-4: இக்ஷுகந்தா காஸகோகிலாக்ஷயோ: கோக்ஷுரே—அ. வ. iv, 151.]

இக்குவாகு—குந்துருக்கம்பிசின், ஓர் இராசன், பேய்ச்சுரை. [1: 2, 3: இக்ஷ்வாகு: கடுதும்ப்யாம் ஸ்ரீஸூர்யவம்ஸ்யந்ருபே வாரீ—வை. க, 50.]

44\. அக்கங்க ணம்புலன்ஞா நம்வழக்குச் சகட
மச்சுக்காற் பலங்கவறு தான்றிசுவர்ச் சிகைப்பேர்
சிக்கமெலி வுறிசீப்புக் குடுமிசிறைச் சாலை
செக்கர்வா னிறத்தோன்வீ ரேச்சுரன்ம கேசன்
பக்கமயிர்த் திரள்சிறகு சகாயநட்புக் கிரகம்
படையடுப்பின் றுளையுறுப்புத் திரள்பூர்வா பரமென்
பக்கம்விலாப் புறஞ்சாத்தி யமரசுவா வருக்கம்
பகைமாதப் பாதிபித்தி சமீபம்பா ரிசமே.

அக்கம்—கண்[1], ஐம்புலன்[2], ஞானம்[3], வழக்கு[4], சகடம்[5], அச்சு[6], காற்பலம்[7], கவறு[8], தான்றி[9], சுவர்ச்சிகை[10]. [1: திவா. ii, 206. 2-10: 𑌅𑌕𑍍𑌷𑌾 𑌰𑌥𑌸𑍍𑌯𑌾𑌵𑌯𑌵𑍇 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍇 𑌵𑌿𑌭𑍀𑌤𑌕𑍇, 𑌪𑌾𑌶𑌕𑍇 𑌶𑌕𑌟𑍇 𑌕𑌰𑍍𑌷𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇...; 𑌅𑌕𑍍𑌷𑌂 𑌸𑍌𑌵𑌰𑍍𑌚𑌲𑍇...𑌹𑍃𑌷𑍀𑌕𑍇—𑌅. ஸ. ii, 543, 544. அச்சு-தேரச்சு. சுவர்ச்சிகை-ஓர் உப்பு.]

சிக்கம்—மெலிவு, உறி, சீப்பு, குடுமி, சிறைச்சாலை. [1, 5: அக. 2, 3: திவா. xi, 292. 4: பிங். x, 486.]

செக்கர்வானிறத்தோன் — வீரபத்திரன், சிவன். [1: சூடா. i, 22. 2: அக.]

பக்கம்—மயிர்த்திரள்[1], சிறகு[2], சகாயம்[3], நட்பு[4], கிரகம்[5], படை[6], அடுப்பின் துளை[7], உறுப்பு[8], திரள்[9], பூர்வம் அபரமென்னும் பக்கம்[10], விலாப்புறம்[11], சாத்தியம்[12], அரசுவா[13], வருக்கம்[14], பகை[15], மாதப் பாதி[16], சுவர்[17], சமீபம்[18], பாரிசம்[19]. [1-3, 5-8, 12-16, 19: 𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌸𑌾𑌰𑍍𑌧𑍇 𑌗𑍃𑌹𑌸𑌾𑌧𑍍𑌯𑌯𑍋𑌃; 𑌚𑍁𑌲𑍍𑌲𑍀𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑍇 𑌬𑌲𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌪𑌕𑍍𑌷𑍇 𑌕𑍇𑌶𑌾𑌤𑍍𑌪𑌰𑌶𑍍𑌚𑌯𑍇, 𑌵𑌿𑌦𑍍𑌧𑍇 𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌦𑍇𑌹𑌾𑌙𑍍𑌗𑍇 𑌸𑌹𑌾𑌯𑍇 𑌰𑌾𑌜𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑍇—𑌅. ஸ. ii, 551, 552. 4, 17, 18: 𑌪𑌕𑍍𑌷𑌃 ... 𑌸𑌨𑍍𑌧𑍀...𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌦𑍇𑌷𑍁—𑌨𑌾. 𑌰. ii, 483. 9: 𑌪𑌕𑍍𑌷𑌃—ஸ. அக. 10: 𑌪𑌕𑍍𑌷𑍌 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑍌—𑌅. 𑌕𑍋 I, iv, 12. 11: ஸ. அக.]

45. அக்கரம்விண் ணெழுத்துமுத்தி யறந்தவமிக் கான்மா
அக்குவிடை யின்முரிப்புச் சங்குமணி யெலும்பாம்
நக்கனிரு வாணிசம ணன்சிவன்வக் கிப்போன்
நக்கிரம்வா யிலினிடுமேற் படிமரமாண் முதலை
விக்கிரகம் சமர்பிரிப்புச் செயலுடல்வித் தாரம்
விக்கிரம மிகுவலிசம் பத்துக்கால் வைப்பாம்
அக்கிரமுக் கியமூற்றம் பரிமாணம் பலமுன்
னுதிதிரள் சிரேட்டநுனி மதிலதிக மேலாம்.

அக்கரம்—ஆகாசம், எழுத்து, முத்தி, அறம், தவம், பரமாத்மா. [1-6: 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌪𑌵𑌰𑍍𑌗𑍇 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌯𑍋𑌃; 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌯𑌜𑍍𑌞𑍇 𑌤𑌪𑌸𑍋𑌃 — 𑌅. ஸ. iii, 509, 510.]

அக்கு—எருத்தின் முரிப்பு, சங்குமணி, எலும்பு. [1, 2: பிங். x, 6. 3. அக.]

நக்கன் — நிர்வாணி, சமணன், சிவன், வந்திப்போன். [1, 2, 4: நக்நோ விவாஸஸி; ஶாமயெ க்ஷபணகெ ச—சு. ஸ. ii, 267, 268. 3: திவா. i, 1.]

நக்கிரம்—வாயிலினிடு மேற்படிமரம், ஆண்முதலை. [1. 2: நக்ரம் ... த்வாரதாரு ணோ:; நக்ரோ யாதஸி—சு. ஸ. ii, 423, 424.]

விக்கிரகம் — போர், பிரிப்புச்செயல், உடல், வித்தாரம். [1-4: விக்ரஹோ யுத்தி விஸ்தாரெ ப்ரவிபாகஶரீரயோ:—சு. ஸ. iii, 764.]

விக்கிரமம் — மிகுவலி, சம்பத்து, கால்வைப்பு. [1-3: விக்ரம: ஶக்திஸம்பத்தி; க்ராந்தௌ ச—சு. ஸ. iii, 465, 466.]

அக்கிரம்—முக்கியம்[1], பற்றுக்கோடு[2], பரிமாணம்[3], ஓர் நிறை[4], முன்[5], ஆதி[6], திரள்[7], சிரேட்டம்[8], நுனி[9], மதில்[10], அதிகம்[11], மேல்[12]. [1: அக்ரம் ... ப்ரதானயோ:—உ. கோ. 695. 2-9, 11, 12: அக்ரம் பலம்: ப்ரதமே஽திகெ, உபரிஷ்டாத் புநே ஶ்ரேஷ்டெ பரிமாணெ பதம்ஸ்ரு ச; ஸம்காதே ப்ராந்தே஽பி—சு. ஸ. ii, 381, 382. பலபரிமாண மென்று கோசங்களில் வருவது இங்குப் பலம் பரிமாண மென்று இரண்டு பொருளாக வந்திருக்கின்றது. ஆசிரியர்க்குக் கிடைத்த கோசாந்தரங்களில் பலம் பரிமாணமென்னும் பொருள்கள் பாடபேதங்களால் இருந்தன போலும். 10:]

46. சுக்கிரங்கள் விந்திரியங் காடிநீர் கண்ணோய்
சுகிர்தம்பொன் புளிவஞ்சி புளியானி மாதம்
சக்கிரிசெக் கான்குயவன் சக்கிரவா கப்புட்
சற்பஞ்சக் கிரவேந்தன் சக்கிரபா ணியும்பேர்
கொக்குமா மரமூல நாள்பரியோர் பறவை
குக்குடந்தீப் பொறிகோழி காணுங்கோ ழியுமாம்
பக்குமம்பூ விதழிமையின் மயிர்பூந்தா திறகு
பஞ்சிஞா லாதியினுண் ணுனியடுப்பின் றொளேயே.

சுக்கிரம்—கள்[1], விந்து[2], காடி[3], நீர்[4], கண்ணோய்[5], சுகிர்தம்[6], பொன்[7], புளிவஞ்சி[8], புளி[9], ஆனிமாதம்[10]. [1, 4, 6, 7: ஶுக்ரம் ... வாருண்யாம் ஶுக்லெ ஸுக்ருதேஷு ச—நா. ர. ii, 365. 2, 5, 10: ஶுக்ரஸ்து ... ஜ்யேஷ்டமாஸெ ...; ஶுக்ரம் த்து ரேதோ஽க்ஷிரோகயோ:— சு. ஸ. ii, 452, 453. 3: 8, 9: வ்ருக்ஷாம்லெ ஸ்வகவெதஸெ—சு. ஸ. ii, 409.]

சக்கிரி—செக்கான், குயவன், சக்கிரவாகப்புள், சர்ப்பம், சக்கரமுடைய அரசன், திருமால். [1: பிங். v, 80. 2-6: 'வக்ரீ கொகெ கூலாலெ ஸெஹள வெகூஹெர வக்ரவதிநி' ஐதி ஹெஉ:—கூ. கொ. (I, viii, 7.) வியாக்கியாசுதை யென்னும் உரையிற் காணப்படுகிறது.]

கொக்கு—மாமரம், மூலநட்சத்திரம், குதிரை, ஓர் பறவை. [1-4: பிங். x, 400.]

குக்குடம்—தீப்பொறி, கோழி, காஞுங்கோழி. [1-3: கூக்கூடீ: கூக்கூஹெ தாஉவஹெ வஹிகணெவி வ—கூ. வ. iii, 147.]

பக்குமம்—பூவிதழ், இமைமயிர், பூந்தாது, இறகு, பஞ்சினூலாதியின் நுண்ணிய நுனி, அடுப்பின் துளை. [1-5: வக்ஷாகூஷியொஷ்டி தந்தாஷி-வஷுக்ஷாஂஶெ கூவஸஉஹெ, மஶாக்ஷிஜக்ஷயொஶ்வாவி — கூ. வ. ii, 270. 6: வஷ்மீஶெ வ வக்ஷ வஸ்ராக—நா. ர. ii, 276.]

47\. **பக்ககம் பாரிசம் பக்க வாயிலர்ம்**
தெக்கண னன்மனத் தவன்றி யாகிபேர்
அக்கதம் பொரியவை யரிசி தானியம்
பக்கதி புட்சிற கடிமு தற்றிதி.

பக்ககம்—பாரிசம், பக்கவாயில். [1, 2: வக்ஷகः வாஶ்வாதெ வ வக்ஷஜாரெ வ வக்ஷகः—வி. வ. க, 136.]

தெக்கணன்—நல்மனத்தவன், தியாகி. [1, 2: ஊக்ஷிண—ஸ. அக.]

அக்கதம்—பொரி, யவையென்னுந் தானியம், அரிசி, தானியம். [1-4: க்ஷக்ஷதம் தணுலெ யாநெ ந நா ஶாஜெஷ நா யவெ—வெ. 258, 27.]

பக்கதி—பறவைச்சிறகடி, முதற்றிதி. [1-2: வக்ஷதி: வதிவத்தி-யெள; வக்ஷஉஹெ—கூ. வ. iii, 268, 269.]

48\. **உக்கிர கந்தம்வெள் ளுள்ளி யிங்குவாம்**
உக்கிர கந்தை யோமம் வசம்பெனும்
திக்கெனல் புகலிடம் திசையு தாரணம்
சிக்குரு வெனலிலைக் கறிமு ருங்கையே.

உக்கிரகந்தம் — வெள்ளுள்ளி, பெருங்காயம். [1: உ஗்ரமஞ:—ஸ. அக. 2. உ஗்ரமஞ்ஜ—ஸ. அக.]

உக்கிரகந்தை — ஓமம், வசம்பு. [1: உக்ரகந்தா ஜமோதாயாம் வசாயாம் — மே. ய, 45.]

திக்கு—புகலிடம், திசை, உதாரணம். [1: வழக்கு. 2: 'திக் த்ரியாம் திசா ...' இதி ஶப்தார்ணவ:—சு. கொ. (I, iii, 1) வியாக்கியாசுதை என்னும் உரையிற் காணப்படுகிறது. 3: திஶ் —ஸ. அக.]

சிக்ஷிரு — இலைக்கறி, முருங்கை. [1, 2: ஶிக்ருர்னா ஶாகபேதே ச ஶோபாஞ்ஜநமஹீருஹே—மே. ர, 90.]

49. **ஏகருண் டலன்கு பேரன் பலராம னாதி சேடன்**
கீகசம் புழுவெ லும்பாம் கீகடம் மகதம் பாய்மா
வாகசம் பெரும்பாம் பாரைப் புதல்புனற் பாய்ச்சல் தீயாம்
காகணி காற்ப ணங்காற் கஃசுகான் முழஞ்சோ கிப்பேர்.

ஏககுண்டலன்—குபேரன், பலராமன், ஆதிசேடன். [1-3: ஸ. அக.]

கீகசம்—புழு, எலும்பு. [1, 2: கீகஸஸ்து க்ருமௌ கீகஸோஸ்தி—சு. ஸ. iii, 742.]

கீகடம்—மகததேசம், குதிரை. [1, 2: கீகடா: ... தேஶமேதே த்ராஜமே—சு. ஸ. iii, 146.]

வாகசம்—பெரும்பாம்பு, ஆரைப்புதல், நீர்ப்பாய்ச்சல், நெருப்பு. [1-3: வாஹஸோஜகரே வாரிநிர்யாணஸ்நிஷண்ணயோ:—சு. ஸ. iii, 750. 4: வாஹஸோக்நௌ—நா. ர. iii, 453.]

காகணி — காற்பணம், காற்கஃசு, கால்முழம், சோகி. [1-4: காகணீ மாநதண்டஸ்ய த்ரியாம்ஶே பணஸ்ய ச, க்ருஷ்ணாயாம் வராடே ச —சு. ஸ. iii, 189.]

50. **ஆகதங் குணிதங் கந்தை யடிப்பது பொய்ம்மைச் சொல்லாம்**
தோகதம் வயாநோய் வேட்கை தோகளஞ் சிந்தை யிச்சை
மாகத னிராச மாதின் வணிகற்குற் பவன்று திப்போன்
ஆகமம் வருகை யோர்நூல் ஆகவஞ் சமர்வேள் விப்பேர்.

ஆகதம்—பெருக்கிக் கண்ட பேறு, கந்தை, அடிப்பது, பொய்ம்மைச்சொல். [1, 3, 4: ஆஹதம் த்ரிஷு தாடிதே, குணிதே தாடிதே வாசி—சு. ஸ. iii, 236. 2: ஆஹதம் ..., ... வஸ்த்ரே ஜீர்ணவஸ்த்ரே வி—மே. த, 90.]

தோகதம்-மசக்கை, வேட்கை. [1, 2: ஶஸ்ரீணீ ஹாயாபிஹாஷதே- ஸவி தொஹதஃ—ஈ. கொ. I, vii, 28, மகேசுவரர் டீகை.]

தோகளம்—சிந்தை, இச்சை. [1: 2: தொஹளஃ — ஶ்ரூ- ஷ் இச்சா:.]

மாகதன்—க்ஷத்திரிய ஸ்திரீயிடத்து வைசியனுக்குப் பிறந்தவன், துதிப்போன். [1, 2: ஷாமயொ ... வந்தினொ:; வெெஶ்யாத்: க்ஷத்ரியா- வாமாத்—ஈ. ஸ. iii, 339, 340.]

ஆகமம்—வருகை, ஓர் நூல். [1, 2: ஆமஷிதாமதௌ ஶாஸ்த்ரவி —ஈ. ஸ. iii, 453.]

ஆகவம்—போர், யாகம். [1, 2: ஆஹவ: ஸஷெர யஜ்ஞவி— ஈ. ஸ. iii, 687.]

51. ஆகமார் பொடுதே கப்பே ரேகமே தனிமை யொன்றும்
ஊகம்வா நரத்த ருக்க முத்தியி னிச்ச யப்பேர்
கோகமே மிப்புட் செந்நாய் தவளைசிற் றீந்துங் கூறும்
சாகம்வெள் ளாட்டாண் தேக்கந் தருவிலைக் கறியோர் தீவே.

ஆகம்—மார்பு, தேகம். [1, 2: திவா. xi, 22.]

ஏகம்—தனிமை, ஒன்று. [1, 2: ஏக: ஸம்வ்யாந்தரே ... கேவல ... —மெ. க, 18.]

ஊகம்—குரங்கு, தர்க்கம், உத்தியினிச்சயம். [1: திவா. iii, 49. 2: ஈயர்ாஹாரஸ்தர்க்க உளஹ:—ஈ. கொ. I, v, 3. 3: தர்க்க-ஙுவிக்ஸர்ஶ உளஹ:—வெ. 97, 350.]

கோகம் — சக்கிரவாகப்புள், செந்நாய், தவளை, சிற்றீந்து. [1-4: கொகஶ்க்ரே வ்ருகெ ... வர்ஜ-ஙுமீத்ரமஷஹெகயொ: — வி. வ்ர. க, 30.]

சாகம்—வெள்ளாட்டின் ஆண், தேக்கமரம், இலைக்கறி, ஓர் தீவு. [1: ஊாமஷஸ்தஷமகா அஜெ—ஈ. கொ. II, ix, 76. 2-4: ஶாகொ த்வீபாந்த- ரெவி வ, ... த்ருமவிஶெஷெ வ வாஷாஹ ஹரிதகெஸ்ரியாழ்—மெ. க, 36.]

52. தோகஞ்சா தகப்பு ளற்பங் குலபரம் பரைசு தன்பேர்
மோகமே பழுதஞ் ஞாந மூர்ச்சையா சைப்பெ ருக்கம்
வேகமோர் மரம்ப்ர வாக மிந்தியம் விசைநாற் பேராம்
மோகரோ வியருன் மத்தர் மூகனல் கூர்ந்தோ னூமன்.

தோகம் — சாதகப்புள், அற்பம், குலபரம்பரை, மகன். [1, 2: ஷோகஃ ஸ்ராஹூாதகாலு்யோ:—அ. ஸ. ii, 21. 3, 4: தொகஂ ஸந்தாநஸுதயோ:—அ. ஸ. ii, 10.]

மோகம்—பழுது, அஞ்ஞானம், மூர்ச்சை, ஆசைப்பெருக்கம். [1: அக. 2, 3: கவிஷ்ஷ ஜி அஜ்ஞயொர்ஹோஹ: — ஜ. கொ. 952. 4: சூடா. vii, 76.]

வேகம் — ஓர் மரம், பிரவாகம், விந்து, விசை. [1-4: வெமொரயவ்ரவாஹயொ:; ரேதஃ கிஂவாகயொஸ்ராவி—அ. ஸ. ii, 47, 48.]

மோகர்—ஓவியர், உன்மத்தர். [1: சூடா. ii, 28. 2: அக.]

மூகன்—வறியன், ஊமன். [1, 2: ஜஅகொ ... கவாதீநெஷு—அ. ஸ. ii, 14.]

53. ஆகர முறைவி டத்தோ டரதனப் பூமி கூட்டம்
சீகரங் கரகந் தூறல் திவலைசா மரங்கல் லோலம்
சேகரஞ் சூட்டு மாலை சிரமகு டந்தி ரட்சி
ஆகல நம்பி ணித்த லெண்பெருக் குதலா சித்தல்.

ஆகரம் — உறைவிடம், அரதனபூமி, கூட்டம். [1-3: ஆகராஸ்தாநவநெர்யாவா:—நா. ர. iii, 348.]

சீகரம்—கரகம், தூறல், திவலை, சாமரம், அலை. [1, 5: பிங். x, 505. 2, 3: ஶீகர:; வாதாஸ்ருஜலெஷ்வநுகணெ—அ. ஸ. iii, 606, 607. 4: சூடா. xi, க, 15.]

சேகரம்—சிகைமாலை, தலை, மகுடம், திரட்சி. [1: ஶிகாஸ்ராவீஜஶெவரௌ — அ. கொ. II, vii, 136. 2: திவா. ii, 210. 3: ஶெவர:—ஸ. அக. 4: அக.]

ஆகலநம் — பிணித்தல், எண்பெருக்குதல், விரும்பல். [1-3: ஆகலநஂ வரிஸஂவ்யாகாக்ஷயொஸ்நநெஃவி வ—அ. ஸ. iv, 160.]

54. காகள மிகுதி சுட்கந் தெரியாச்சொல் களமெக் காளம்
காகளி தருணப் பெண்கா களங்கண்டத் தெழுமெல் லோசை
ஏகன்மற் றவன்ம கேசன் பிரதாந னொருவ னென்ப
பாகனூர் தியையூர் வோனோ ரசுரன்பங் கினன்பு தன்பேர்.

காகளம்—மிகுதி, உலர்ந்தது, தெரியாச்சொல், களம், எக்காளம். [1-3, 5: காஹலம் த்ரு ஸ்ராஹ்ராஸெ வாவ்ய்க்தவாகி வ; ஷேஷெ வ வாஜ்யஹெஷெ வ—ஈ. ஸ. iii, 628, 629. 4: காஹல: ...; ... வமெ—ஜெ. ஸ, 75, 76.]

காகளி—தருணஸ்திரீ, காகளம், கண்டத்தி லெழும் மெல்லோசை. [1: காஹலீ தருணஸ்ரியா—ஈ. ஸ. iii, 629. 2: எக்காளம். 3: காகலீ த்ரு கலெ ஸூக்ஷ்ம த்வநெள த்ரு ஜயாமாஷ்டெ — ஈ. கொ. I, vii, 2.]

ஏகன்—மற்றவன், மகேசன், பிரதானன், ஒருவன். [1, 3, 4: வகொ-ந்ய: கேவல: ஸ்ரேஷ்ட: —ஈ. ஸ. ii, 2. 2: வக:—ஸ. அக.]

பாகன்—ஊர்தியை யூர்வோன், ஓர் அசுரன், பங்கினன், புதன். [1: வாஹ :—ஸ. அக. 2: வாக: ... தைத்யயொ: — ஈ. ஸ. ii, 12. 3: ஹாகிநு—ஸ. அக. 4: திவா. i, 58.]

55. ஆகிருதி யுருவு டம்பா மாகுலம் வருத்த மோசை
கோகிலங் குயில்க லப்பை குறைக்கொள்ளி யுலக்கை யென்ப
காகுபா மரச்சொல் கண்ட தோடத்தி னொலிவி காரம்
நாகுவெற் பெருமை யான்சங் கிளமைபுற் றுமா நத்தை.

ஆகிருதி—உரு, உடம்பு. [1, 2: ஆக்ருதி: காயருவயொ:—ஶா. கொ. 671.]

ஆகுலம்—வருத்தம், ஓசை. [1: பிங். vii, 121. 2: திவா. x, 173.]

கோகிலம்—குயில், கலப்பை, குறைக்கொள்ளி, உலக்கை. [1, 3: கொகிலாவ்ருஷ்ணகவிகெள — நா. ர. iii, 392. 2, 4: ஶொகில:; உலூ-லெ லாஜ்லெ வாவி—ஈ. ஸ. iii, 637, 638.]

காகு—பாமரச்சொல், கண்டதோடத்தின் ஒலி விகாரம். [1: 2: காகு: ஸ்த்ரியாம் விகாரொ ய: ஶொகஹீத்யாதிஜிர்த்வநெ:—ஈ. கொ. I, vi, 12.]

நாகு—மலை[1], எருமை[2], பசு[3], சங்கு[4], இளமை[5], புற்று[6], காட்டுப் பசு[7], நத்தை[8]. [1, 6: நாகஃ: ... வ்யாஸ்ரவஸோஃயோ: வஃஶா — ஜெ. க, 27. 2, 3: திவா. iii, 86. 4, 8: திவா. iii, 209. 5: திவா. viii, 204. 7:]

56. பாகுவெல் லம்ப ருப்புக் குழம்புபாக் குப்பா கன்பேர்
வாகுதோ ளழகா மென்ப வாகையோர் மரந்தோள் வெற்றி
சாகைதோ ளருகு வேதப் பங்கரி தகிகொம் பர்ப்பேர்
தோகைவால் மயில்முன் ருனை துவசம்புட் சிறகு மாமே.

பாகு—வெல்லம், பருப்புக்குழம்பு, பாக்கு, பாகன். [1, 2: பிங். x, 776. 3: சூடா. xi, ண, 8. 4: அக.]

வாகு—தோள், அழகு. [1: திவா. ii, 189. ஹஜபாஹு வ்யவெஷா ஷொ: ஸ்யாத—க. கொ. II, vi, 80. 2: சூடா. xi, க, 13.]

வாகை—ஓர் மரம், தோள் வெற்றி. [1: பிங். ix, 94. 2: பிங். vii, 9. தோள் வலியாற் பெறும் வெற்றி.]

சாகை—தோள், அருகு, வேதப்பகுதி, கடுக்காய், மரக்கிளை. [1-3, 5: ஶாவா உஶாஂஶெ வெஶாஂஶெ ஹஜெ...,க நிகெ—க. ஸ. ii, 26. 4: ஶாவா—ஸ. அக.]

தோகை—வால், மயில், முன்ருனை, கொடி, பறவைச் சிறகு. [1: திவா. iii, 112. 2: திவா. iii, 148. 3: திவா. vii, 284. 4: பிங். vi, 197. 5: பிங். viii, 84.]

57. நீகாச முறுதி யொப்பாம் பூகேச மால்நீர்ப் பாசி
நாகாதி பதிசு ரேசன் வாசுகி நாற்கோட் டியானை
ஆகார முருவ முண்டி செய்தெரி யாக்க ருத்தாம்
மாகாலன் மாசாத் தன்றன் படைத்தலை வன்மா தேவன்.

நீகாசம்—உறுதி, ஒப்பு. [1, 2: நீகாஶொ நிஶ்சயெ தஃயெ—க. ஸ. iii, 716.]

பூகேசம்—ஆலமரம், நீர்ப்பாசி. [1, 2: ஹுகெஶ: ஶைவலெ வடெ—க. ஸ. iii, 718.]

நாகாதிபதி—இந்திரன், வாசுகி, ஐராவதம். [1: நாகாயிபதி:—ஸ. அக. 2: நாமாயிபதி: — வாஸுகிஸ்த ஸா ராஜ: என்னும் க. கொ. I, viii. 4 ஆதாரமாதல் வேண்டும். 3: நாமாயிபதி:. யானைகளுள் தலைமைபெற்ற தென்பது பொருள்.]

ஆகாரம் — உருவம், உண்டி, நெய், தெரியாக்கருத்து. [1, 4: ஆகார இங்கிதாகாரௌ—அ. ஸ. iii, 515. 2: ஆஹார: ... ஹோஜ-நெ—ஹே. ர, 114. 3: பிங். x, 88.]

மாகாலன் — மாசாத்தன்றன் படைத்தலைவன், சிவன். [1, 2: மஹாகாலோ மஹாதேவ ... ப்ரமதாந்தரே—ஹே. ஏ, 159.]

58. நாக தந்தம் யானைக்கொம் பதுபோ னாட்டு முளையாணி
ஆக ரிகமண் ணகழ்கருவி பன்றி பெருச்சா ளியுமாகும்
நாக புட்பம் புன்னாகஞ் சிறுநா கப்பூச் சம்பகமாம்
ஓகம் வெள்ளம் பரம்பரைவீ டிடங்கு ழாங்கூத் தின்றுருதம்.

நாகதந்தம் — யானைக்கொம்பு, யானைக்கொம்புபோல் நாட்டும் முளை. [1, 2: நாகதந்தோ ஹஸ்திதந்தே கேஹாந்நி:ஸ்ருதகாரணி — அ. ஸ. iv, 112. 2: நாகதந்தாஸ்து நாகேந்த்ர தந்தாகாராணி—வை. 163, 105.]

ஆகரிகம்—மண்ணகழ் கருவி, பன்றி, பெருச்சாளி. [1: ஆகரிக:—ஸ. அக. 2, 3: ஆகரிகஸ்து வராஹஸ்ய கிரௌ உந்துர ... —அ. ஸ. iv, 4.]

நாகபுட்பம்—புன்னாகம், சிறுநாகப்பூ, சம்பகம். [1-3: நாகபுஷ்பம் புந்நாகே வஸுகே நாககேஸரே—அ. ஸ. iv, 209.]

ஓகம்—வெள்ளம், பரம்பரை, வீடு, இடம், குழாம், கூத்தின் துருதம். [1, 2, 5, 6: ஓக: ப்ரவாஹ: ஸம்வாதோ த்ருதந்ருத்தம் பரம்பரா—அ. ஸ. ii, 52. 3, 4: ஓகஸ்வௌ கஸ்தோராஸ்ரயௌ—நா. ர. ii, 10.]

59. சூகம் நெல்வா லம்புமுனை சுணைகாற் றிரக்கங் கருநெய்தல்
சேகம் வளர்க்கும் மிருகம்புள் ளோடுநீ ரிறைக்கை வல்லமையாம்
பேகம் முகில்மண் டூகப்பேர் பேகன் பீரு வோர்வள்ளல்
மேக மோர்நோய் முகில்கோரை வீகம் பூட்டு மோதிரமே.

சூகம்—நெல்வால்[1], அம்பு[2], முனை[3], சுணை[4], காற்று[5], இரக்கம்[6], கருநெய்தல்[7]. [1, 6: ஶூகோ க்ஷ்ட்ரி ஶூகஜயயோ:—ஹே. க, 38. 2, 5, 7: ஸூக:—ஸ. அக. 3: ஶூக:—ஸ. அக. 4: அக.]

சேகம்—வளர்க்கும் மிருகமும் பறவையும், நீர் இறைக்கை, வல்லமை. [1, 3: சேகோ விக்ஷே விஶ்வஸ்த்ரமதீஜயோரபி — அ. ஸ. ii, 7. 2: ஸேக:—ஸ. அக.]

பேகம்—மேகம், தவளை. [1, 2: ஹெகொ லெவஊ-ஞுக ...—ஊ. வ. ii, 13.]

பேகன்—பயந்தவன், ஓர் வள்ளல். [1: ஹெகொ ... வீரஷ—ஊ. வ. ii, 13. 2 : பிங். v, 32.]

மேகம்—ஓர் நோய், முகில், கோரை. [1: ஜூரமெஹஹமநூா:—ஊ. கொ. II, vi, 56. 2, 3: லெவஹ ஊஹகெ ஜலடெவி வ—ஊ. வ. ii, 52.]

வீகம்—பூட்டு, மோதிரம். [1: ஸீமஉ என்னும் தெலுங்குச் சொல். 2: பிங். vi, 96.]

60. **போகம் வேசை கரிபரியின் பணையம் பொருளி ராச்யமநு**
போகம் விளைவு பாம்பினுடல் படம்பா லகம்போ சகஞ்சுகமாம்
யோக முடல்கூட் டரவுமருந் துபாயம் கவசம் நிலைமைபிர
யோகம் விட்கம் பாதிதநம் யுத்தி முயற்சி யியமாதி.

போகம்—வேசை யானை குதிரையின் பணையம்[1], பொருள்[2], இராச்சியம்[3], அனுபோகம்[4], விளைவு[5], பாம்பின் உடல்[6], பாம்பின் படம்[7], காத்தல்[8], போசனம்[9], சுகம்[10]. [1, 6, 7, 10: ஹொம: ஸவெ ஹூஷிஹ-தாவஹெஷு ஹணகாயயொ:—ஊ. கொ. III, iii, 23. மகேசுவரர் டீகையில் 'ஹூஷிஹதெள வணூஸீணாு. கூஷிஸ ஊாஊஹூூஷாஷிகூகாரா-ணாஂ ஹதெள உ-ஏஜெ வாலெந ஹரணெ வா ஹொம:' என்று வருவதும் கவனிக்கத் தக்கது. 2, 3, 8, 9: ஹொமஹூ ராஜெ ...; யநெ ... வாலநாஹவஹாரயொ:—ஊ. வ. ii, 39, 40. 4: நிக. 29. 5: அக.]

யோகம்—உடல்[1], கூட்டரவு[2], மருந்து[3], உபாயம்[4], கவசம்[5], நிலைமை[6], பிரயோகம்[7], விட்கம்பம் முதலிய யோகம்[8], தனம்[9], யுக்தி[10], முயற்சி[11], இயமம் முதலிய யோகாங்கம்[12]. [1-12: யொமொ...; ...ஸஂம-தூஂ காஜூணயூநயக்ஷி, வவ:ஸெஷூரவூயொமெ வ ஸஂநாஹெ ஹெஷஜெ யநெ; விஷ்கூஊவவாயெ வ—ஊ. வ. ii, 42-44. விட்கம்ப முதலியன சோதிட வழக்கு. யோகத்தில் பிரதானமான தியானம் அட்டாங்கத்தில் மற்ற அங்கங்களையுந் தழுவி நின்றது.]

61. **வாகம் நானூற் றுக்குறுணித் தொகைபாய் மாத்தே ரெருதென்ப**
ஆக ருடம்விற் பழக்கஞ்சூ ததன்றன் பலகை கவறிழுத்தல்
கோக ருணமோர் தலமோர்பாம் பணிவி ரற்சாண் கோச்செவிமான்
போக வதிபா தாளகதி யுரக புரிசு காநுபவை.

வாகம்—நானூற்றுக்குறுணித்தொகை, குதிரை, தேர், எருது. [1, 2, 4: வாஹொரஸ்ஹூரநயொ:; வ்ருஷெ—கூ. ஸ. ii, 588, 589. மாகம்-மாக பேதம். 3: வாஹ:—ஸ. அக.]

ஆகருடம்—விற்பழக்கம், சூது, சூதாடுதற்குரிய பலகை, கவறு, இழுத்தல். [1-5: ஆகர்ஷ: வாஸகெ யநாஹ்ராஸாஜெ ஊ்ஹைதெ ..., ஆக்ருஷ்டௌ ஸாரிஃஸ்ஃகெஃவி—கூ. ஸ. iii, 725.]

கோகருணம்—ஓர் தலம், ஓர் பாம்பு, மோதிரவிரற் சாண், பசுவின் செவி, ஓர் மான். [1, 4: கொகர்ண:—ஸ. அக. 2, 3, 5: கொகர்ணொ ... ஸர்ப்வ ஸாரஜெ வ ...; ஊஜுஷ்டாநாமிகொந்ாமெ—மெ. ண, 46, 47.]

போகவதி — பாதாளநதி, நாகர்நகரம், சுகமனுபவிப்பவள். [1, 2: ஹொமவதீ தூ ஸர்வாணாம் நமரெஸவி ஸரிதர்வி—கூ. ஸ. iv, 125. 3: ஸ. அக.]

62\. சாகசமா ராயாமற் செய்தல்வலாற் காரந்
தண்டித்தல் துவேடம்பொல் லாதசெயற் செய்கை
காகமோர் சுரதபந்த மோர்மரமோர் தீவோர்
கண் ணுளபுள் ளோரளவை தலைகழுவு தலும்பேர்
நாகம்விண் சுவர்க்கமலை நாகதந்தம் புன்னை
நாகப்பூக் குரங்குகுரு ராசாரந் துத்த
நாகமீ யந்தகரங் கரிசுரத பேதம்
நற்றூசோர் கரணமுகில் பெருங்கோரை பாம்பாம்.

சாகசம்—ஆராயாமற் செய்தல், வலாற்காரம், தண்டித்தல், துவேஷம், பொல்லாத செயற் செய்கை. [1-3, 5: ஸாஹஸம் தூ ஊமெ ஊுக்ஷாரகர்ணி; கவிமூஸ்ருக்ருதௌ யாஷ்ரெ—கூ. ஸ. iii, 753, 754. 4: அக.]

காகம்—ஓர் சுரதபந்தம்[1], ஓர் மரம்[2], ஓர் தீவு[3], ஓர் கண்ணுள்ள பறவை[4], ஓர் அளவை[5], தலைகழுவுதல்[6]. [1-6: காக: ..., த்வீபாநதரூஹெ-ஷெஷூ ஸிரொஸவகூஷாலநெ த்விகெ; காகம் ... ஸ்ராதரூதவயூ வ யொஷிதாம்—கூ. ஸ. ii, 4, 5.]

நாகம்—ஆகாசம்[1], சுவர்க்கம்[2], மலை[3], யானைக் கொம்பு[4], புன்னை[5], நாகப்பூ[6], குரங்கு[7], குரூராசாரம்[8], துத்தநாகம்[9], ஈயம்[10], தகரம்[11], யானை[12], சுரதபேதம்[13], நல்லாடை[14], பதினொருகரணத் தொன்று[15], மேகம்[16], பெருங்கோரை[17], பாம்பு[18]. [1, 2: நாக: ஸு: வெ—கூ. ஸ.

i, 10. 3: திவா. v, 16. 4-6, 8, 10, 12, 13, 15-18: நாமௌ உதஜெஜ ஸுவூ வஹநாமெ நாமகெஸமெ; கூ நிராவாமெ நாமஷகூ உஷகெ வாஸிஷெ ஷி வ, ...; நாமம் ... ஸீஸெவதெ ஸீஸைய கமணாநுமெ —அ. ஸ. ii, 32-34. 7: நிக. 42. 9,11: அக. 14: திவா. vii, 275.]

63. பாகம்பாக் கியஞ்சிசுபக் குவஞ்சமைத்தல் பிச்சை
பங்குரு பகப்பாதி யேகதே சமுமாம்
பூகமே கமுகுதிரண் டதுதொளிகா லப்பேர்
போகலே குதல்கடத்தல் நீளுதலோ டுயர்தல்
நாகரமோர் மொழிநகரோற் பவங்கோரை சுக்காம்
நாகரிகங் கண்ணேட்ட நகரசம்பந் தமும்பேர்
வாகரமோக் கத்தினிச்சை நிருணயஞ்சா ணைக்கல்
வடவாமு காநலஞ்செந் நாய்தடையச் சமுமே.

பாகம்—பாக்கியம்[1], சிசு[2], பக்குவம்[3], சமைத்தல்[4], பிச்சை[5], பங்கு[6], ரூபகப்பாதி[7], ஏகதேசம்[8]. [1, 7, 8: ஹாமௌ ரூவாமூகெ ஹாமெஜகஷெஙயொ:—அ. ஸ. ii, 38. 2, 4: வாகஃ: வவமெ ஸிஸ ... —அ. ஸ. ii, 12. 3: அக. 5: திவா. ix, 88. 6: நிக. 28.]

பூகம்—கமுகு, திரண்டது, துளி, காலம். [1, 2: வநிம: கூஉக ஸஂவயொ:—அ. ஸ. ii, 35. 3, 4: ஸ௱ிகஷூஜெ காலெ—அ. ஸ. ii, 13.]

போகல்—ஏகுதல், நடத்தல், நீளுதல், உயர்தல். [1: அக. 2: திவா. ix, 38. 3: திவா. viii, 31. 4: பிங். vii, 2.]

நாகரம்—ஓர் மொழி, நகரத்திலுண்டானது, கோரை, சுக்கு. [1: ஸ. அக. 2-4: நாமரஃ, ஸணீஉஷகவௌமெஷ—அ. ஸ. iii, 500.]

நாகரிகம்—கண்ணேட்டம், நகரசம்பந்தம். [1: பிங். vii, 278. 2: நாமரிக—ஸ. அக.]

வாகரம்—மோட்ச இச்சை[1], நிர்ணயம்[2], சாணைக்கல்[3], வடவாமுகாக்கினி[4], செந்நாய்[5], தடை[6], அச்சம்[7]. [1, 3-7: வாமமெ வாமகெ ஸாணெ ... வாஙவெ வுகெ, உஉக்ஷெ...வஸிதயூஷயெஷி வ—அ. ஸ. iii, 593. வாமகஃ என்பது தடையாம். உஉக்ஷ: என்பது மோக்ஷ இச்சை யுடையவன் என்று பொருள்படும். வஸிதயூஷய: என்பது பயம் விட்டவனைக் குறிக்கும்; வி. வு., ஜெ. கோசங்களும் மதாதஜெ என்றன. அச்சமென்று பொருள் செய்யும்படி பாடபேதம் ஒன்று இருந்தது போலும். 2: வாமஸஷ ...; ... நிணயெ—ஜெ. ம. 212, 213.]

64. காகருகன்கபடி திகம்பரனல் கூர்ந்தோன்
காமசித னிடம்பமுளோன் பயப்பட்டோ னென்ப
மேகலையேழ் கோவைப்பெண் ணரைமாலை கயிறு
வெற்பினடுக் கடிப்புறம்வா ளுறைவேள்விக் கோலம்
போகிநா விதனரசன் சுகாநுபவன் பிரபு
புருகூதன் வியாபாரத் தொழிற்செய்வோன் பாம்பு
யோகிசிவன் மாசாத்தன் யோகுடையோ னருகன்
யோகினியோர் தேவதையா மளைதிதிச்சூ லமுமே.

காகருகன்—கபடி, நிர்வாணி, வறியன், காமத்தை வென்றோன், இடம்பமுள்ளோன், பயப்பட்டோன். [1: காகருகஃ — ஸ. அக. 2-6: காகருகொ திமஹ்வரெ; ... ஸ்ரீஜிதெ உடூ வீரகெ நிஷுடெசவி வ —க. ஸ. iv, 6, 7.]

மேகலை — ஏழ்கோவைப் பெண்அரைமாலை, கயிறு, மலையின் நடு, கடிப்புறம், வாளுறை, ஓமகுண்டத்தைச் சுற்றியிடுங் கோலம். [1: மேகலை காஞ்சி கலாபம் பருமம், விரிசிகை யேழுமோ ரெட்டுமீ ரெட்டு, மூவாறு நாலெட்டு முறைக்கோவை மணியே—திவா. vii, 57. ஸ்ரீகடிஸ்ரீ மெவலா காஞ்சீ ஸப்தகீ ரஸநா ததா; க்ஷீபெ ஸாரஸநம் வ—க. கொ. II, vi, 108, 109. மகேசுவரர் உரையிலும் வியாக்கியாசுதையிலும் 'ஏகா யஷ்டிர்பவெத் காஞ்சீ மெவலா த்வஷ்டயஷ்டிகா:, ரஸநா ஷொடஸ ஜ்ஞேயா கலாப: பஞ்சவிம்ஸக:' என்னுஞ் சுலோகம் காணப்படுகிறது. 2, 3, 5: மெவலாத்ரி நிதம்பே ஸ்யாத்கூஸநாவத்வபந்தயோ: — க. ஸ. iii, 672. 4: கய மெவலா, ஶ்ரோணிஸூத்ரெ — வெ. 248, 35. 6: மெவலா— ஸ. அக.]

போகி — நாவிதன்[1], அரசன்[2], சுகம் அநுபவிப்பவன்[3], பிரபு[4], இந்திரன்[5], வியாபாரத் தொழிற் செய்வோன்[6], பாம்பு[7]. [1, 2, 4, 6, 7: ஹோகீ ஹுஜஜெ, வெயாவ்ருத்திகரெ ராஜ்ஞி ஶ்ராமண்யாம் நாவி-தெசவி வ—க. ஸ. ii, 273. 3: ஹொகிநு—ஸ. அக. 5: பிங். x, 872.]

யோகி — சிவன், ஐயனர், யோகம் பயின்றவன், அருகன். [1: திவா. i, 1; யொகிநு—ஸ. அக. 2: பிங். ii, 25. 3. யொகிநு—ஸ. அக. 4: சூடா. i, 5.]

யோகினி—ஓர் தேவதை, யாமளை, திதிச்சூலம். [1, 2: யொகிநீ— ஸ. அக. 3: விதானமாலை, எச்சவினைப்படலம், 42.]

65. சைகத மணற்றிடர் மணற்ற றைப்பெயர்
சைகதி கன்சம ணன்று றந்தவன்
நைகமன் வைச்சிய னகர வாசியாம்
வைகல்நாள் கழிவுநாள் வதிதல் வைகறை.

சைகதம்—மணற்றிடர், மணற்றறை. [1: ஸைகதம் ஸிகதா-ப்ராயம்—வை. 156, 66. 2: ஸைகதம் ஸிகதாமயம் — அ. கோ. I, x, 9.]

சைகதிகன்—சமணன், துறந்தவன். [1, 2: ஸைகதிகம் ...; நா ஸம்ந்யஸ்தே க்ஷபணகே — ஹே. க, 221, 222.]

நைகமன் — வைசியன், நகரவாசி. [1, 2: நைகம: ... வணிஜோ-நாகரேऽபி ச — ஹே. ஹ, 46.]

வைகல் — நாள், கழிவு நாள், தங்குதல், வைகறை. [1: திவா. i, 119. 2-4: திவா. xi, 376.]

66. ஆகசென் பதுதவ றதமம் பாவமாம்
கீகட னென்பகல் கூர்க்தோன் கிருபணன்
வேகட னரதன வினைஞ னிளமையன்
மாகதம் வெண்சீ ரகமக தோற்பவம்.

ஆகசு — தவறு, அதமம், பாபம். [1, 3: பாபாபராதயோ-ராக:—அ. கோ. III, iii, 229. 2: ஆகஸ்—ஸ. அக.]

கீகடன்—வறியன், உலோபி. [1, 2: கீகட: க்ருபணே நி:ஸ்வே—அ. ஸ. iii, 146.]

வேகடன் — இரத்தினப்பணி செய்வோன், இளமையன். [1, 2: வேகடோ ஜாததாருண்யே மணிகாரே—அ. ஸ. iii, 160.]

மாகதம்—வெண்சீரகம், மகததேசத்திற் பிறந்தது. [1, 2: மாகதோ மகதோத்பந்நே ஶுக்லஜீரகே ... —அ. ஸ. iii, 339.]

67. மாகதி முல்லைதிப் பலியோர் பாடையாம்
மேகந மூத்திர மாண்குறி மேவுறும்
கேகய மசுணப் புள்ளோர் தேயமாம்
பாகலம் யானையி னேய்கறுங் கோட்டமே.

மாகதி—முல்லை, திப்பலி, ஓர் பிராகிருத பாஷை. [1-3: மாகதீ ஸ்யாத் பிப்பலீ, யூதிகா பாஷாவிஶேஷயோ:—அ. ஸ. iii, 340.]

மேகநம்—மூத்திரம், ஆண்குறி. [1, 2: मेहनं मूत्रशिश्न-योः —ச. ஸ. iii, 392.]

கேகயம் — அசுணப்புள், ஓர் தேசம். [1: திவா. iii, 143. 2: ஸ. அக.]

பாகலம் — யானையின் நோய், நறுங்கோட்டம். [1, 2: पाकलो द्विपज्वरे; पाकलं कुष्ठभेषजे—ச. ஸ. iii, 656, 657.]

68. பாக தேயங் குடியிறை பாக்கியம்
மேக நாதஞ் சிறுகீரை காரொலி
மேக நாதன் வருண னிராவணி
மேக புட்ப மழைத்துளி யோசைநீர்.

பாகதேயம்—குடியிறை, பாக்கியம். [1, 2: भागधेयः बलिः करे, ... भागधेयं तु भाग्ये—ச. ஸ. iv, 228.]

மேகநாதம் — சிறுகீரை, மேகத்தின் ஒலி. [1: मेघनादो [illegible] — வை. 57, 301. 2: मेघनादो मेघशब्दे — ச. ஸ. iv, 145.]

மேகநாதன்—வருணன், இராவணன் மகன். [1, 2: मेघनादो ... वरुणे रावणात्मजे—ச. ஸ. iv, 145.]

மேகபுட்பம் — மழைத்துளி, ஓசை, நீர். [1-3: मेघपुष्पं तु नादेये विष्णोर्हये सलिलेऽपि च—ச. ஸ. iv, 211. ‘मेघपुष्पं तु नादे [illegible]’ என்பதும் பாடம்’—நிர்ணயஸாகரப் பதிப்பு.]

69. சோக மனத்துயர் திரளை தொடையாம்
மாக மகப்பூ ரணையுறு மாதம்விண்
யூகம் படையின் வகுப்புந் தலைப்பேனும்
பாகல் பலாமர மோர்பைங் கொடியுமே.

சோகம்—மனத்துயர், திரளை, துடை. [1: [illegible]—ச. கொ. I, vii, 25. 2: பிங். vii, 478. 3: திவா. ii, 173.]

மாகம்—மகப்பூரணையுறும் மாதம், ஆகாசம். [1: माघः—ஸ. அக. 2: திவா. i, 36.]

யூகம்—படைவகுப்பு, தலைப்பேன். [1: வ்யூஹஸ்து ப³லவிந்யாஸ:—அ. கொ. II, viii, 79. 2: யூக:—ஸ. அக.]

பாகல்—பலாமரம், ஓர் பைங்கொடி. [1, 2: பிங். x, 775.]

70. கோகந தஞ்செங் குமுதஞ்செந் தாமரை
சாகரங் கண்டுயி லாமை சமுத்திரம்
வாகரன் பண்டிதன் றுறவி முமுட்சுவாம்
சாகிவெள் ளாடுவே தந்தரு வென்னுமே.

கோகநதம்—செங்குமுதம், செந்தாமரை. [1, 2: ஸ்யாத் கோகநத³ம் ரக்தகுமுதே³ ரக்தஸரோஜே—மே. த, 47.]

சாகரம்—கண்ணுறங்காமை, சமுத்திரம். [1: ஜாக³ர:—ஸ. அக. 2: ஸமுத்³ரோ ..., ... ஸாக³ர:—அ. கொ. I, x, 1.]

வாகரன்—பண்டிதன், துறவி, முமுட்சு. [1-3: வாக³ரோ ..., முமுக்ஷௌ பண்டி³தே வாரி வஸிதஸ்யாபிஸ்யவி வ—அ. வ. iii, 593. 63-ம் செய்யுளில் 'வாகரம்' என்னும் சொல் வந்தது. ஆசிரியர்க்கு இக்கோசமும் இப்பொருளைத் தரும் வேறு கோசங்களும் பிரமாணமாக இருந்தனவாயின், துறவி பயத்தை யொழித்தவனாகையால் வஸிதஸ்ய என்னுந் தொடர் துறவியைக் குறித்ததாக அவர் கொண்டா ரெனல் வேண்டும். துறவிக்கு முக்கியபயம் ஸம்ஸார பயம். இன்னும், ஸ. அக. யும் வாகரன் என்பதற்குப் பொருள் சொல்லுங்காலை சூரன், தைரியவான் என்றது.]

சாகி—வெள்ளாடு, வேதம், மரம். [1: அஜா ஷாகீ — அ. கொ. II, ix, 76. 2, 3: ஶாகீ² து த்³ருமவேத³யோ:—அ. வ. ii, 282.]

71. வாகினி யோர்படைத் தொகைநதி சேனை
போகில் புட்பொதுப் பூமொட்டுக் கொப்பூழ்
ஆகு வராக மெலிபெருச் சாளியாம்
வாகுசந் தானுப் பிறந்தவெள் ளுக்கிளி.

வாகினி—ஓர் படைத்தொகை, நதி, சேனை. [1-3: வாஹினீ து ஸேநாநத்³யோர்விஶேஷே—அ. வ. iii, 405.]

போகில்—பறவைப்பொது, பூமொட்டு, கொப்பூழ். [1-3: பிங். x, 873.]

ஆகு—பன்றி, எலி, பெருச்சாளி. [1: ஆுவ-ூ ஸ-ூகூர ... —ஹெ. 214, 13. 2: உ-நூ-ஈு-ரூ-ூஷகொாஃவ்ராவ-ः—ஊ. கொ. II, v, 12. 3: திவா. iii, 62.]

வாகுசம் — தானக முளேத்த எள், கிளி. [1, 2: வாஹ-ஜஸூ-ஷுயஂஜாதகிமெ ... கீரயொ:—ஊ. ஸ. iii, 137.]

72. வாகுரை மிருகம் படுக்கும் வலேயுறி
கோகுலம் கோயில்கோ சாலே பசுத்திரள்
நாகுலி யென்பசிற் றரத்தை செவ்வியம்
ஈகை யிச்சை கொடையெடுப் பீங்கையே.

வாகுரை—மிருகம் படுக்கும் வலே, உறி. [1: வாமுரா ஜாமவ-நுநீ—ஊ. கொ. II, x, 26. 2:]

கோகுலம்—கோயில், கோசாலே, பசுத்திரள். [1: கோ குலம் எனப் பிரித்து 'குலம்' என்றற்கு இல் என்னும் பொருள் உண்மையால் கோயில் எனப்பட்டது. 2: மொகுலஂ—ஸ. அக. 3: மொகுலஂ தெ மொயநஂ ஸ்ராவாஂ வ்ஜெ—ஊ. கொ. II, ix, 58.]

நாகுலி—சிற்றரத்தை, செவ்வியம். [1, 2: நாகுலீ வவ்ராஸூ-யொ:—ஊ. ஸ. iii, 651.]

ஈகை—இச்சை, கொடை, எடுப்பு, இண்டங்கொடி. [1, 3: ஈஹா ஸ்ராஉ-ஊ்ஜெஷுயொ:—ஶா. கொ. 703. 2, 4: பிங். x, 155.]

73. சாகா மிருகங் குரங்குதே வாங்கணில்
வாகீ சன்கவி ஞன்வாக் கிறையயன்
பாகூ டஞ்சல சரம்பற் பதமுமாம்
காகோல மோர்நஞ் சண்டங் காக்கையே.

சாகாமிருகம் — குரங்கு, தேவாங்கு, அணில். [1: கவிஷுவஜஷுவமஶாவாஜாமவரீஉ-வா: — ஊ. கொ. II, v, 3. 2: தேவாங்கு மரக் கிளேயைப் பற்றியிருக்கும் ஓர் மிருகம். 3: ஶாவாஜாம:—ஸ. அக.]

வாகீசன்—கவிஞன், வாக்குக்கிறை, பிரமன். [1, 3: வாமீஶ:—ஸ. அக. 2: வாமீஶொ வாகூதி: ஸஉள—ஊ. கொ. III, i, 35.]

பாகூடம்—மீன், மலை. [1, 2: ஹாகூடு: ஸௌஃரீநயோ: — க. ஸ. iii, 156. 'ஹாகூடு: என்பதும் பாடம்' — நிர்ணயசாகரப் பதிப்பு. ஹாகூடு: கயஂதெ ஶீநஹெஷெ ஸௌவாநு௱ெஸவி வ—வி. வ்ரு. டு, 47. ஜெ., நா. ஸ. கோசங்களும் இவ்வாறே.]

காகோலம்—ஓர் நஞ்சு, அண்டங்காக்கை. [1, 2: காகொலொ ஜௌகூ௱ௌ விஷெ—க. ஸ. iii, 628.]

74. தீக்கணம் விடங்க டுஞ்சூ டிரும்புபோர் செய்யுட் சீரின்
தீக்கணங் கடலி னுப்புத் தீப்பொறி யுவர்ப்போ டெண்பேர்
மோக்கமே மோச நம்பேய்ப் பாதிரை மரண முத்தி
பாக்கரன் றகநன் பாநு வாக்குப்பா மகள்சொல் லாமே.

தீக்கணம்—விடம்[1], கடுஞ்சூடு[2], இரும்பு[3], போர்[4], செய்யுட் சீரின் தீக்கணம்[5], கடலினுப்பு[6], தீப்பொறி[7], உவர்ப்பு[8]. [1-4: விஷாஹிஸாலொ-ஹெஷ௱ தீக்ஷ்ணம் தீவெ வரெ திஷ௱—க. கொ. III, iii, 53. 5: வச்சணந்திமாலை, முதன்மொழி யியல், 21. 'இடைநேர் — புளிமாங்கனி — தீக்கணம்.' 6: தீக்ஷ்ணம் ஸஶுஜவணெ—க. ஸ. ii, 141. 7: தீ + கண:. கண: = பொறி—ஸ. அக. 8. அக.]

மோக்கம் — விடுதல், பேய்ப்பாதிரை, மரணம், முத்தி. [1-4: ஜோக்ஷா நி:ஶ்ரெயஸெ வ்ருக்ஷவிஶெஷெ ஜோவநெ ஶ்ரெதௌ — க. ஸ. ii, 556. 2: ஜோக்ஷ:—க. கொ. II, iv, 39.]

பாக்கரன் — அக்கினி, சூரியன். [1, 2: ஹாஸ்கரொ வஹ்நிஸூர்யயோ:—க. ஸ. iii, 578.]

வாக்கு—சரசுவதி, சொல். [1, 2: வாக் வவநெ ஸரஸ்வத்யாம் ஹாஷா ஶீஷ்ஃரதீ யயா—வி. வ்ரு. வ, 11.]

75. ஊக்கலே முயலல் நோக்கல் நெகிழ்த்தல்மேற் கொளனி னைத்தல்
தாக்கலெண் பெருக்கல் முட்டல் தாக்கென்ப வலியும் போரும்
தூக்கலே நிறுத்தல் தேர்த லெடுத்தல்தூக் குதலு மாகும்
நீக்கலே யகற்றல் போக்கல் பிரித்தல்மாற் றலுமி கழ்த்தும்.

ஊக்கல்—முயலல், நோக்கல், நெகிழ்த்தல், ஏறுதல், நினைத்தல். [1: அக. 2: 3: அக. 4, 5: அ. வி. நி. 20.]

தாக்கல்—எண்பெருக்கல், முட்டுதல். [1: அக. 2: நிக. 36.]

தாக்கு—வலி, போர். [1: அக. 2: திவா. ix, 147.]

தூக்கல்—நிறுத்தல், தேர்தல், எடுத்தல், தூக்குதல், [1, 4: நிக. 37. 2: திவா. ix, 73. 3: அக.]

நீக்கல்—அகற்றல், போக்கல், பிரித்தல், மாற்றல். [1: நிக. 36. 2, 3: 'நீங்கலே பிரிதல் போகல்'—நிக. 55. நீக்கல் அதன் பிறவினை. 4: அக.]

76. **நோக்கலே காத்தல் பார்த்தல் நோக்கென்ப தழகு பார்வை**
பாக்கியம் யவட்சா ரம்முற் சுபாசுப வினையட் டுப்பாம்
யோக்கியன் பிரிய வாக்கி யுபாயகன் சமர்த்தன் றக்கோன்
ஆக்கிர கங்கைக் கொள்கை யருள்கைநிற் பந்தங் கோபம்.

நோக்கல்—காத்தல், பார்த்தல். [1: பிங். vii, 65. 2: பிங். vii, 288.]

நோக்கு—அழகு, பார்வை. [1: பிங். vii, 183. 2: அக.]

பாக்கியம்—வெடியுப்பு, முற்செய்த நல்வினை தீவினை, அட்டுப்பு. [1: யவக்ஷாரோ ...; பாக்யூ:—க. கொ. II, ix, 108, 109. 2: ஸா-மூ்ரம் காரு ஸுஹாஸுஹூ—க. கொ. III, iii, 154. 3: பாக்யூம் விஷம் ச க்ருதகே லூயபூ—க. கொ. II, ix, 42.]

யோக்கியன்—பிரியவாக்கி, உபாயகன், சமர்த்தன், தக்கோன். [1-4: யொமெயூா யொமாஹு ஸக்துயோ:; உபாயிநி வஸுவீணெ ச—க. ஸ. ii, 367, 368. யொமாஹு: என்பதற்கு டீகைகாரர் உசிதன் என்று பொருள் கூறினர். இச் சுலோகத்தில் உள்ள வஸுவீண என்னும் சொல்லே 'பிரிய வாக்கி' யென மொழிபெயர்க்கப்பட்டதோ அன்றி அப்பொருளுக்கு வேறு ஆதாரமுளதோ அறியுமாறில்லை. வஸுவீண: என்பதற்குத் தாதுப் பொருள் வீணைவல்லான் என்பது. அதுவே இலக்கணையாகப் பிரியவாக்கி யெனப் பொருள் பட்டது போலும். வஸுவீணொவிதயொமெயூாமூ: —உ. கொ. 621.]

ஆக்கிரகம்—கைக்கொள்கை, அருள்கை, நிர்ப்பந்தம், கோபம். [1-3: ஆமூஹொ நுமூஹ ... நிஷ் நுமூஹணெஷு —நா. ர. iii, 461. 4: அக.]

77\. மேக்குமேற் குயர்வு மேலாம் மீக்கோளே றுதல்மேற் போர்வை
சூக்குமம் நுண்மை யான்மா வணுத்தேற்றோர் சிவாக மப்பேர்
தோக்குமம் பசுமை பச்சை யவைகாதின் மலமுஞ் சொல்ப
சேக்கைகற் கடகங் கொங்கை மிருகந் துஞ் சிடம்ப டுக்கை.

மேக்கு—மேற்கு, உயர்வு, மேல். [1, 3: சூடா. xi, க, 9. 2: திவா. v, 231.]

மீக்கோள்—ஏறுதல், மேற்போர்வை. [1: பிங். vii, 221. 2: திவா. vii, 283.]

சூக்குமம்—நுண்மை, ஆன்மா, அணு, தேற்று, ஓர் சிவாகமம். [1-4: ஸூக்ஷ்மோऽணௌ ஸூக்ஷ்மமத்யாத்மகே, ஸ்யாத்மதே கதகே—ஙு. வ. ii, 333. 5: அக.]

தோக்குமம் — பசுமை, பச்சை, யவை, காதின்மலம். [1-4: தோக்மம் கர்ணமலே தோக்ம: ஸ்யாஜ்யவே ஹரிதேऽபிவ—ஙு. வ. ii, 317.]

சேக்கை—கர்க்கடகம், கொங்கை, மிருகம் துயிலிடம், படுக்கை. [1: சூடா. i, 64. 2, 4: பிங். x, 547. 3: சூடா. xi, க, 14.]

78\. ஆக்கம் பெருக்கங் கொடிப்படைதாக் கணங்கி லாபம் பொருளை ம்பேர்
ஊக்கம் வலியுற் சாகமந வெழுச்சி மிகுதி யுயர்ச்சியெனும்
தூக்க முறக்க மாலசியங் குடையி லணியிற் றூங்குவவாம் [பே.
தூக்குக் கூத்துப் பாட்டுறிகாற் றுலாந்[து லாந்]தூக் கணமொப்

ஆக்கம் — பெருக்கம், கொடிப்படை, இலக்குமி, இலாபம், பொருள். [1: திவா. viii, 141. 'நந்த லாக்கம்.' 2: திவா. ii, 158. 3: திவா. i, 18. 4: திவா. viii, 211. 5: பிங். vii, 10.]

ஊக்கம்—வலி, உற்சாகம், மனவெழுச்சி மிகுதி, உயர்ச்சி. [1, 2: பிங். x, 187. 3: திவா, viii, 117. 4: சூடா. viii, 8.]

தூக்கம்—உறக்கம், சோம்பு, குடையிலும் அணியிலுந் தூங்குவன. [1, 3: அ. வி. நி. 17. 2: அக.]

தூக்கு—கூத்து[1], பாட்டு[2], உறி[3], காற்றுலாம்[4], துலாம்[5], தூக்கணங்குருவி[6], ஒப்பு[7]. [1-3: பிங். x, 635. 4: நா. தீ. நி. 805. 5. திவா. viii, 252. 'துலாம்' என்னும் பொருள் பிரதிசெய்தோரால் எழுதாது விடப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றினமையின் இங்குச் சேர்க்கப்பட்டது. 6: அக. 7: சூடா. viii, 78.]

79. ஆக்கலுண் டாக்கல் செய்தல் சமைத்தல்
ஆக்கிநே யந்தென் கிழக்கோர் புராணம்
சீக்கிரம் பண்டி யிலாமிச் சம்விசை
பாக்கெதிர் கால விடைச்சொற் றுவர்க்காய்.

ஆக்கல்—உண்டாக்கல், செய்தல், சமைத்தல். [1: நா. தீ. நி. 691. 2: அக. 3: நா. தீ. நி. 734.]

ஆக்கிநேயம் — தென்கிழக்கு, ஓர் புராணம். [1, 2: ஆக்நேய— ஸ. அக.]

சீக்கிரம்—வண்டி, இலாமிச்சம், விசை. [1-3: ஶீக்ரம் வக்ராஜ-தர்ணயோ:, உஶீரே—க. ஸ. ii, 452.]

பாக்கு—எதிர்கால இடைச்சொல், துவர்க்காய். [1: நன். 343. 2: பிங். vi, 650.]

80. அங்கச முரோமஞ் செந்நீ ரங்கசன் மைந்தன் காமன்
அங்கதி கொடைதீ யோர்நோ யயனங்கி கோத்தி ரன்பேர்
துங்கம்வெற் புயர்ச்சி புன்னை துங்கிதை வேளை மஞ்சள்
புங்கமங் களவொ ழுக்கம் வல்லூறம் புக்கு தைப்பேர்.

அங்கசம்—உரோமம், இரத்தம். [1, 2: அங்கஜோ...; ...கேசேஷ்வங்க-ஜம் ரக்தே—அ. ஸ. iii, 131, 132.]

அங்கசன்—மகன், மன்மதன். [1, 2: அங்கஜோ ஆத்மஜே ஸ்மரே—அ. ஸ. iii, 131.]

அங்கதி—கொடை, தீ, ஓர் நோய், பிரமன், அக்கினிஹோத்திரன். [1, 3: அம்ஹதிஸ்த்யாகரோகயோ:—அ. ஸ. iii, 233. 2, 4, 5: அங்-க்திர்வஹ்நிவேதஸோ:; அக்நிஹோத்ரிணி—அ. ஸ. iii, 232, 233.]

துங்கம்—மலை, உயர்ச்சி, புன்னை. [1-3: துங்க: ஸ்யாந்நாகநக-யோ: ... ஸ்யாதுந்நதேऽபி ச — அ. ஸ. நிர்ணய சாகரப்பதிப்பில் அதிகப்பாடமாக 'நக:' என்பதை அடுத்துக் காணப்படுகிறது. அ. கோ. II, iv, 25, வியாக்கியாசுதையில் ஆளப்பட்டுளது.]

துங்கி—தைவேளைச் செடி, மஞ்சள். [1, 2: துங்கீ ரோத்ரா ஹரித்ராயாம் வர்வராயாமபீஷ்யதே — அ. ஸ. மேற்கண்டது போன்றதே.]

புங்கம் — மங்களவொழுக்கம், வல்லூறு, அம்புக்குதை. [1-3: புங்க: ஸ்யாச்சுபாசாரே ஸ்யேநே ஸரஸ்ய மூலகே—அ. ஸ. ii, 23.]

81. வங்கமோர் தேயம் நாவாய் வழுதுணை தகர மீயம்
பொங்கர்வெற் பிலவு கொம்பர் புங்கவன் சிரேட்டன் றேவன்
பிங்கலன் சிவனி நன்பாற் றகசனோர் முசிகு பேரன்
சிங்கலே மெலிதல் குன்றல் திங்கள்சந் திரன்மா தப்பேர்.

வங்கம் — ஓர் தேசம், மரக்கலம், கத்தரி, தகரம், ஈயம். [1, 3-5: வங்க: ... வ்ருந்தாகே வங்கா ஜநபதாந்தரே; வங்கம் த்ரபுணி ஸீஸே ச—அ. ஸ. ii, 46, 47. 2: திவா. vii, 215.]

பொங்கர்—மலை, இலவு, மரக்கொம்பு. [1, 3: பிங். x, 862. 2: பிங். ix, 61.]

புங்கவன் — சிரேட்டன், தேவன். [1: வ-ஜவ: — ஸ. அக. சு. கொ. III, i, 59-ல் இச்சொல் உத்தரபதமாக வரும்பொழுது இப் பொருள் தருமென்று கூறப்பட்டுளது. 2: திவா. i, 28.]

பிங்கலன்—சிவன், சூரியன்பாற் றகனன், ஓர் முனி, குபேரன். [1-3: விஜுவ: ... ஈ-ஜெ-ஜுவாரிவாஸ்ரீகெ; ... 3-மெள — சு. ஸ. iii, 660, 661. வாரிவாஸ்ரீக—அணுக்கன். ஓர்முனி — சந்தஸ் என்னும் வேதாங்க நூல் செய்தவர்; தமிழ் நிகண்டு செய்தவருமாம். 4: திவா. i, 10.]

சிங்கல்—மெலிதல், குன்றல். [1: பிங். vii, 171. 2: திவா. ix, 139.]

திங்கள்—சந்திரன், மாசம். [1, 2: பிங். x, 609.]

82. தொங்கலாண் மயிர்பூ மாலை தோகைவெண் கவிகை நாலல்
மங்கல்மட் குதல்கெ டற்பேர் மங்குல்விண் ணிரவு மேகம்
சுங்கியா லித்தி கல்லால் துங்கீசன் மகேசன் சோமன்
பங்கியாண் மயிரு ரோமம் பிரகாரந் தரங்கம் பத்தி.

தொங்கல் — ஆண்மயிர், பூமாலை, மயிற்றோகை, வெண்குடை, நாலல். [1: திவா. ii, 211. 2: திவா. iv. 254. 3: திவா. iii, 149. 4: திவா. vii, 227. 5: அக.]

மங்கல்—மட்குதல், கெடல். [1: அக. 2: பிங். vii, 154.]

மங்குல்—ஆகாசம், இரவு, மேகம். [1: திவா. i, 36. 2: திவா. i, 117. 3: திவா. i, 147.]

சுங்கி — ஆலமரம், இத்திமரம், கல்லால். [1-3: ஶ-ஜூ்ர 3ாடெத வடெ வூகெஷ—சு. ஸ. ii, 48.]

துங்கீசன்—சிவன், சந்திரன். [1-2: த-ஹீஶ: ஶஶாஜெ ஶஶி-ஶெவரெ—சு. ஸ. iii, 713.]

பங்கி—ஆண்மயிர், உரோமம், விதம், அலை, வரிசை. [1: திவா. ii, 211. 2: திவா. ii, 214. 3: ஹஜி—ஸ. அக. 4, 5: ஹஜி: வ-ஙீ; ஹக்தி-வீவெர்ா:—சு. ஸ. ii, 37, 38.]

83. தங்கிச மருமந் துட்டங் கவசங்கண் டநங்காட் டீயாம்
வங்கிச முதுகி னென்பு குலஞ்சம வாய மூங்கில்
இங்கித மனக்கு றிப்பின் றொழில்கம நம்பு ணர்ச்சி
சங்கிதை புராண வேதங் களிற்சில பங்கு சாஸ்த்ரம்.

தங்கிசம்—மருமம், தோடம், கவசம், கண்டனம், காட்டு ஈ. [1-5: தம்ஶோ வர்மணி மர்மணி, தோஷே வநமக்ஷிகாயாம் கண்டநே — அ. ஸ. ii, 535.]

வங்கிசம்—முதுகெலும்பு, குலம், சமூகம், மூங்கில். [1: வம்ஶ-ஸ்து ப்ருஷ்டஸ்யாஸ்தி—வை. 178, 131. 2-4: வம்ஶோऽந்வய: ஸமூ-ஹஶ்ச... வேணவ:—அ. கோ. 882.]

இங்கிதம் — மனக்குறிப்பின் தொழில், கமனம், புணர்ச்சி. [1, 2: இங்கிதம் து ஸ்வசேஷ்டாயாம் மநோகதே ச—அ. ஸ. iii, 241. கமனம்—போதல். 3: இங்கிதம் ரதி ... —நா. ரு. iii, 180.]

சங்கிதை — புராண வேதங்களிற் சில பகுதி, சாத்திரம். [1, 2: ஸம்ஹிதா ... ஶாஸ்த்ரவேதைகதேஶயோ: — அ. ஸ. iii, 299. புராணத்திற் பகுதி இதில் விடப்பட்ட தாயினும் சங்கர ஸம்ஹிதை முதலியன ஸ்காந்த முதலிய புராணங்களில் உண்மை பிரசித்தம். டீகைகாரர் 'ஶாஸ்த்ரவேதைகதேஶ' என்று தனியே பிரித்ததும் கவனிக்கத்தக்கது.]

84. சங்கியை விசார மெண்ணுஞ் சங்குரந் திமிசு தேரே
அங்கிரி மரவேர் காலா மங்ஙன மாங்கத் தன்மை
பொங்குதல் கிளர்தல் கூர்தல் பொலிதல்பொங் கிடல்சோ ரூக்கல்
குங்குமஞ் செந்நி றஞ்செஞ் சாந்தொடு மரமுங் கூறும்.

சங்கியை—விசாரம், எண் [1, 2: ஸங்க்யா ஸங்க்யாநே விசாரே ச —அ. ஸ. ii, 376.]

சங்குரம்—திமிசு, தேர். [1, 2: ஶங்குர: ஸ்யந்தநே வ்ருக்ஷே—அ. ஸ. iii, 546. திமிசு-ஓர் மரம்.]

அங்கிரி—மரவேர், கால். [1, 2: அங்க்ரி: பாதத்ருமூலயோ:—அ. கோ. 703.]

அங்ஙனம்—ஆங்கு, அத்தன்மை. [1, 2: அக. 'அங்ஙன்'—நிக. 51.]

பொங்குதல்—கிளர்தல், மிகுதல், பொலிதல், பொங்கிடல், சோறு சமைத்தல். [1-5: அக.]

குங்குமம்—செந்நிறம், செஞ்சாந்து, குங்குமமரம். [1: அக. 2: குங்குமேஂ; ..., ... லோஹிதவந்நஂ — சு. கோ. II, vi, 123, 124. 3: பிங். ix, 8. குங்குமஂ—ஸ. அக.]

85. சங்காசஞ் சமீப மொப்பா மங்கார்ரக் தழலி ருந்தை
சிங்காணம் வளைமண் ணின்பாத் திரமூக்கின் மலங்கிட் டப்பேர்
சிங்காரம் யானை யின்பூ டணஞ்சிந்தூ ரங்கை செய்யுஞ்
சிங்காரம் நவர சத்தொன் றிலவங்கம் பொடியுஞ் செப்பும்.

சங்காசம்—சமீபம், ஒப்பு. [1-2: ஸஂகாஶ: ஸமீபெ஽ஸ்திகெ— சு. ஸ. iii, 722.]

அங்காரம்—நெருப்பு, கரி. [1: அஙாரோ உஹநஸ்ஸ்வ:—வெ. 196, 16. 2: அஙாரோ஽லாதகெஉல்முகெ — சு. கோ. II, ix. 30. இங்கு அங்காரம் எரிகொள்ளியென்று பொருள்படுகின்றது. ஸ. அக. யில் 'கரி' யென்னும் பொருள் காணப்படுகிறது.]

சிங்காணம்—வளைமண்ணின் பாத்திரம், மூக்கு மலம், இரும்புக் கிட்டம். [1-3: ஶிஙாணஂ காவபாத்ரெ ஸ்யாக லோஹநாஸிகயோர்மலெ—மே. ண, 81.]

சிங்காரம்—யானையின் பூடணம், சிந்தூரம், கை செய்யுஞ் சிங்காரம், நவரசத் தொன்று, இலவங்கம், பொடி. [1, 2, 4-6: ஶ்ருஙாரோ மஜ மண்டநெ; ... ரஸபெதெ ச ஶ்ருஙாரஂ நாமஸஂஹவெ, சூர்ணெ லவஙு-லவஙெ ச—சு. ஸ. iii, 607, 608. 3: அக.]

86. பிங்கம்பொன் னிறஞ்சிசுவாம் பிங்கலம்பிங் கலந்தைபொன்மை
பிங்கலைவா மகப்பிடிபொன் னிறப்பெண்வலச் சரமாந்தை
சங்கினியோர் நாடிசத புப்பியோர் சாதிப்பெண்
கங்குதீப் பொறிவரம்பி னருகுகருந் தினைமுப்பேர்.

பிங்கம் — பொன்னிறம், சிசு. [1, 2: பிஙஂ பாலகெ பிஶஙெ —சு. ஸ. ii, 35.]

பிங்கலம்—பிங்கல நிகண்டு, பொன்மை. [1: அக. 2: பிஙல: கபிலெ—சு. ஸ. iii, 660. திவா. viii, 49.]

பிங்கலை—தென்றிசைப் பெண்யானை, பொன்னிறப்பெண், வலச சரம், ஆந்தை. [1, 3: பிஙலா குமுதஸ்த்ரியாஂ, ... நாடீபெதெ —

சு. வ. iii, 661. 2: பிங்கலம் பொன்னிறமென்னும் பொருளதாதலின் பிங்கலை பொன்னிறப் பெண்ணுக்குப் பெயராயிற்று. 4: உ௳-கெவெடி ஹிக்ஷா ஸ்ராக கநகாக்ஷீ வ விஜயா—வெ. 27, 42.]

சங்கினி—ஓர் நாடி, சதபுட்பி, ஓர் சாதிப்பெண். [1: ஶங்கினீ — ஸ. அக. 2, 3: ஶங்கினீ ... வொரவஂஷ்ராஂ வய-ஹிதி — லெ. ந, 141.]

கங்கு — தீப்பொறி, வரம்பின் அருகு, கருந்தினை. [1: அக. 2: பிங். x, 230. 3: கஜு:—சு. கொ. II, ix, 20.]

87\. கங்க தங்குற் சிதந்தருக்கங் கங்குல் பரணி நாளிரவு
அங்க பாலி யுபமாதா வாலிங் கனங்கோ டியுமாகும்
இங்கந் தெரியாக் கருத்தங்க சேட்டை மநுடா திகளென்ப
சங்கி ராமம் ரணமேற்செல் வழியாற் றின்மே லணைசமரே.

கங்கதம்—குற்சிதம், தருக்கம். [1,2: கஜுத: என்னும் சொல் ஸ. அக. யில் சீப்பு என்னுப் பொருளிலும், ஓராசிரியர் பெயராகவும் வருமென்று எழுதப்பட்டுள்ளது. இங்குக்குறித்த பொருள்களுக்கு ஆதாரம் அகப்படவில்லை.

கங்குல்—பரணி நட்சத்திரம், இரவு. [1: அக. 2: திவா. i, 117.]

அங்கபாலி—செவிலித்தாய், ஆலிங்கனம், கோடி. [1-3: சுஜுவாலீ வலீரஜெ ஸ்ராக்ஷோடிராலிவவாதநி—சு. வ. iv, 287.]

இங்கம்—தெரியாக் கருத்து, அங்கசேட்டை, ஜங்கமங்கள். [1-3: ஐஜு: ... ஜஜுஜெஹீதயொரவி — லெ. ம, 5. ஐஜுஂ நரீஜுநெத; கீவஂ ஜமதி — ஜ. கொ. 118, 119. சு. வ. ii, 30-லும் இப்பொருள்கள் காணப் படுகின்றன. 1, 2 பொருள்கள் 'இங்கித' என்னும் சொல்லின் பொருளாகும். தெரியாக் கருத்தங்கசேட்டை என ஒரு பொருளாக்கொண்டு தெரியாக்கருத்தை யுணர்த்தும் அங்கசேட்டை யெனவும் ஒன்று. சு. கொ. III, ii, 15, மகேசுவரர் டீகை இதனை 'சுஹிவாயாநாவெவஹிதவ' என்றது. இனி, மநுடாதிகள் மனிதன் முதலிய அசையும் பொருள்களை யெல்லாம் உணர்த்தும்.]

சங்கிராமம்—ரணமேற் செல்வழி, ஆற்றின்மேல் அணை, போர். [1: ஸஂக்ராம: — ஸ. அக. ஸஂக்ரொ உஜுஸஂவர: — சு. கொ. III, ii, 25. கடத்தற்கரிய வழியென்று பொருள்படுகிறது. 2: ஸஂக்ரம:— ஸ. அக. 3: ஸஂக்ராம:— சு. கொ. II, viii, 105.]

88. அங்க மிடம்பூ ணுருவகம்போ ரப்ர தாந முடலுடலின்
அங்க முபாயங் குறிமடிகோ தருகோர் தேய மோர்கூத்தாம்
சிங்கி யாடா தோடைவிட மிராகு வின்றாய் குறிசெப்புஞ்
சிங்கி சிங்கப் பெண்சிறுகத் தரிமஞ் சிட்டை தேம்புறுத்தல்.

அங்கம் — இடம்[1], பூண்[2], உருவகம்[3], போர்[4], அப்பிரதானம்[5], உடல்[6], உடலின் அங்கம்[7], உபாயம்[8], குறி[9], மடி[10], கோது[11], அருகு[12], ஓர் தேசம்[13], ஓர் கூத்து[14]. [1-4, 9-12, 14: अङ्को भूषारूपकलक्ष्मसु; चित्राजौ नाटकाद्यंशे स्थाने क्रोडेऽन्तिकागसोः —அ. ஸ. ii, 1, 2. चित्राजौ कौतुकसङ्ग्रामे என்று டீகைகாரர் எழுதுவதால் இங்குப் போர் விளையாட்டுப் போராம். 5-8, 12, 13: अङ्गमन्तिकगात्रयोः, उपसर्जनभेदे स्यात् सामर्थ्योपायप्रतीकयोः; अङ्गा नीवृद्विशेषे — அ. ஸ. ii, 29, 30. प्रतीकोऽवयवे என்பது டீகை.]

சிங்கி—ஆடாதோடை[1], விடம்[2], இராகுவின்தாய்[3], குறிசொல்லுஞ் சிங்கி[4], பெண்சிங்கம்[5], சிறுகத்தரி[6], மஞ்சிட்டை[7], தேம்புறுத்தல்[8]. [1, 3, 4, 6: सिंही स्वर्भानुजननी, वासाबृहत्योः क्षुद्रायाम्— அ. ஸ. ii, 591. क्षुद्रा இழிந்த மாது, ஆடும் மாது என்னும் பொருள்களில் வழங்குகின்றது. 2: சூடா. vi, 31. 5: सिंही—ஸ. அக. 7: मञ्जिष्ठा विकसा जिङ्गी—அ. கொ. II, iv, 90. 8: அக. சிங்கி—ஓர் நோய். சிங்கல்—இளைத்தல்.]

89. பங்கா ரம்நீர்க் குமிழிபுனற் பாசி சேது சோபாநம்
சங்கீ ரணமோ ரணியுடம்பா டசுத்தம் நிறைவுங் கலந்ததுமாம்
சங்கு கர்ந மொட்டகங்கத் தபங்கோ வேறு கழுதைப்பேர்[சொல்.
சங்கு லம்வியா குலஞ்செறிவாய் நிறைவுற் றதுதம் மிற்பகைச்

பங்காரம் — நீர்க்குமிழி, நீர்ப்பாசி, அணை, சோபானம். [1-4: पङ्कारो जलकुब्जके; सोपाने शैवले सेतौ—அ. ஸ. iii, 566, 567.]

சங்கீரணம்—ஓர் அணி, உடம்பாடு, அசுத்தம், நிறைவு, கலந்தது. [1: संकीर्णम्—काव्यादर्शः, ii, 7. 2: संकीर्णम् — அ. கொ. III, i, 109. அங்கீகிருத மென்பது பொருள். 3, 4: संकीर्णौ निचिताशुद्धौ— அ. கொ. III, iii, 56. 5: संकीर्णम्—அ. கொ. III, i, 85.]

சங்குகர்ணம் — ஒட்டகம், கழுதை, கோவேறுகழுதை. [1, 2: शङ्कुकर्णौ रासभोष्ट्रौ—வை. 268, 88. 3:]

சங்குலம்—வியாகுலம், செறிவாய் நிறைவுற்றது, தம்மிற்பகைச் சொல். [1, 2: ஸம்குலம் வ்யாகுலே வ்யாப்தே — ம. கோ. 827. 3: ஸம்குலக்லிஷ்டே பரஸ்பரபராஹதே — அ. கோ. I, vi, 19. உதாரணம் 'என் தாய் மலடி' யென்பது; 'குருடன் பார்க்கிறான், செவிடன் கேட்கின்றான்' என்பதுமாம்.]

90. சங்கதிஞா னந்தொடர்பு கூட்டங்கூட் டரவாஞ்
சங்கிரக முடம்பாடீட் டுத லுயர்ச்சி சுருக்கம்
சங்கமோர் நிதிசிறுநா குணநுதலெண் போரெண்
சவைபிராணித் திரள்புலவர் சங்குகுழாம் புணர்ச்சி
பங்கம்நீர்த் திரைகுடிலம் சேறுபின்னந் தோல்வி
பயம்பாவ முரோமமோர் நோய்பிளப்பீ ரைம்பேர்
சங்கரமா பத்துவிட முடம்பாடு கலப்புச்
சமர்கரும நிச்சயம்வன் னிக்காய்குப் பையுமே.

சங்கதி—ஞானம், தொடர்பு, கூட்டம், கூட்டரவு, [1,2: ஸம்கதிர்ஜ்ஞாநஸம்கயோ:— அ. ஸ. iii, 301. 3: ஸம்ஹதி:— அ. கோ. II, v, 40. 4: ஸம்கதி:— ஸ. அக.]

சங்கிரகம் — உடம்பாடு, ஈட்டுதல், உயர்ச்சி, சுருக்கம். [1: ஸம்க்ரஹ:— ஸ. அக. 2-4: ஸம்க்ரஹோ ... உத்தூஜே க்ரஹஸம்க்ஷேபயோரபி— மே. ஹ, 25.]

சங்கம்—ஓர் நிதி[1], சிறு நாகுணம்[2], நெற்றியெலும்பு[3], ஓர் எண்[4], சபை[5], பிராணித்திரள்[6], புலவர்[7], சங்கு[8], குழாம்[9], புணர்ச்சி[10]. [1-3, 8: ஶங்க: கம்பௌ நிதிபேதே ஸ்யாந்நக்யாம் பாலாஸ்தநி — அ. ஸ. ii, 26. சிறு நாகுணம் ஒரு கந்ததிரவியம். 4: ஸம்க்யாபேதேऽபி ஶங்க: ஸ்யாத் —வை. 282, 27. 5-7, 9: ஸம்க:— ஸ. அக. ஸம்கஸார்தௌ து ஜந்துபி: — அ. கோ. II, v, 41. 10: ஸம்க: ஶ்லேஷே ... — ம. கோ. 104. ஶ்லேஷ:—புணர்ச்சி.]

பங்கம் — நீர்த்திரை[1], குடிலம்[2], சேறு[3], பின்னம்[4], தோல்வி[5], பயம்[6], பாபம்[7], உரோமம்[8], ஓர் நோய்[9], பிளப்பு[10]. [1, 2, 4-6, 9, 10: பங்கஸ்தரங்கே பேதே ச ருக்விஶேஷே பராஜயே, கௌடில்யே பய விச்சித்த்யோ: — அ. ஸ. ii, 37. 3, 7: பங்கோऽஸ்த்ரீ கர்தமே — அ. ஸ. ii, 12. 8:]

சங்கரம்—ஆபத்து[1], விடம்[2], உடம்பாடு[3], கலப்பு[4], சமர்[5], கரும நிச்சயம்[6], வன்னிக்காய்[7], குப்பை[8]. [1-3, 5-7: ஸம்கரோऽங்கீக்ருதௌ யு-

ஜேத்ரியாகாரே விஷாவஹோ:, ஸம்ஹாரம் தத்ர ஹேமே ஶஸ்த்ரா:—க. ஸ. iii, 609. 4, 8: ஸங்கரோ ராஜ்ஞதக்ஷிஷ்டே ஜேமநே—உ. கொ. 720.]

91. மங்கலியம் வெளித்துவார வழிதயிரோ ரகில்வில்
 வத்திராய் திருமரஞ்சுக் கழகிதுவெண் கடலை
மங்கலியை சதபுட்பை வெள்வசம்பு ஞாழல்
 வன்னிகவிழ் தும்பைசங்க புப்பிசுமங் கலையாம்
சங்குவெண்சங் கிலைநரம்பின் றிரளாப்போ ராயு
 தங்கைவளை யாண்குறிநீர்ப் பன்றிகுற்றி யோரெண்
அங்குசநூ லாதியினுண் ணுனிகிரண மருக்கன்
 அங்குரம்செென் முளையிரத்த நீருரோ மமுமே.

மங்கலியம்—வெளித்துவாரவழி[1], தயிர்[2], ஓர் அகில்[3], வில்வம்[4], திராய்[5], அரசமரம்[6], சுக்கு[7], அழகிது[8], வெண்கடலை[9]. [1: 2, 4-6, 8, 9: உஜ்ஜ்வலா ராஜிவிரோஸ்ஸ்வஸ்தே த்ராயமாணே உஸஞ்ஜரகே; விஶ்வே உஜ்ஜ்வலம் தத்ர உயுக்தே—க. ஸ. iii, 491, 492, 3: காலாஹரா தத்ர உஜ்ஜ்வலா—வெ. 132, 216. 7:]

மங்கலியை—சதபுட்பை[1], வெள்வசம்பு[2], ஞாழல்[3], வன்னி[4], கவிழ் தும்பை[5], சங்க புட்பி[6], சுமங்கலை[7]. [1-6: உஜ்ஜ்வலா ... ஶமீ, ஶதவாஷ்வா ஶாகூவவா த்ரிபஜ்ஜா: ஶஜ்வவாஷ்வவி; சுய:வாஷ்வீ—க. ஸ. iii, 492, 493. 7: உஜ்ஜ்வலா—ஸ. அக.]

